விலை ரூபா 2:00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஐப்பசி 18 ஸபர் 18 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (3—11—85) இதழ் 266

### யாழ், நகரில் வெள்ளம்—

## 50 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து சுமார் 50 குடும்பங்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மராமத்து (12ம் பக்கம் பார்க்க)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA RECEIVED 4 -11- 1985 PERIODICALS DIVISION LIBRARY

● அரசியல் கைதிகளாக கணிக்க வேண்டும்! ● விசாரணைகள் துரித மடைய வேண்டும்!!

### இம்மாதம் 10ம் திகதி முதல்—

# பூஸாவில் 13 தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் இருக்க முடிவு!

(கொழும்பு)

பூஸா முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள பதின்மூன்று பிரதான தமிழ் தீவிரவாத இளைஞர்கள் தாம் அரசியல் கைதிகளாக கணிக்கப்படவேண்டும் எனவும் தம்மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர். இக்கோரிக்கைகள் கவனிக்கப்படாத விடத்து இம்மாதம் 10ந் திகதி முதல் காலவரையற்ற உண்ணாவிரதமிருக்கப்போவதாக இவர்கள் அறிவித்துள்ளனர்.

இப் பதின்மூன்று இளைஞர்களும் மிகமுக்கிய தீவிரவாத சந்தேக நபர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிரத்தியேகமாகவே பூஸா முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19ந் திகதி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒன்று பூஸா தடுப்பு முகாமுக்குச் சென்றிருந்தது. அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களைச் சந்தித்த பின்னர் அவர்கள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விபரம் அக்குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கண்காணிப்புக்குழுவினால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவரின் அனுமதியுடனேயே பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இம்மாதம் 10ம் திகதி முதல் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்திருக்கும் 13 தீவிரவாத சந்தேகநபர்களும் (12ம் பக்கம் பார்க்க)

## தண்டவாளம் குறுக்கே தென்னை மரம்!

### யாழ்தேவி தாமதம்!!

(யாழ்ப்பாணம்)

ரயில் தண்டவாளத்துக்குக் குறுக்காக தென்னைமரம் ஒன்று கிடந்ததால் கொழும்பிலிருந்து நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ்தேவி 80 நிமிடம் தாமதிக்கவேண்டியேற்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கும் பளைக்குமிடையில் இத்தடை ஏற்பட்டிருந்தது.

நேற்றும் தொடர்ந்து பொழிந்த கடும் மழையால் (12ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் ஒரே இரவில் 2 அரிசி ஆலைகளில் கொள்ளை!

(கொழும்பு)

நேற்று முன்தினமிரவு வவனியாவில் உள்ள இரு அரிசி ஆலைகள் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் கொள்ளையிடப்பட்டன.

ஹொரவப் பொத்தானை வீதியில் உள்ள ராணி அரிசி ஆலை, எவ். வி. ஆர். அரிசி ஆலை ஆகியனவே கொள்ளையிடப்பட்டவையாகும்.

ராணி அரிசி ஆலைக்குள் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் இனந்தெரியாத சுமார் 15 ஆயுத நபர்கள் கொள்ளையிலீடுபட்டனர். இவர்கள் 57 ஆயிரம் ரூபா ரொக்கம், 13 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, மணிக்கூடு, வானொலிப் பெட்டி ஆகியன உட்பட சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றனர். கடந்த இரு மாதகாலத்தில் இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் இந்த அரிசி ஆலையில் கொள்ளையிடப்பெற்றது.

எவ் வி ஆர். அரிசி ஆலையில் சுமார் ஆறு ஆயுதபாணிகள் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் 61,300 ரூபா ரொக்கத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். இந்த அரிசி ஆலை விவேகானந்தராஜா என்பவருக்குச் சொந்தமானதாகும். கொள்ளையர்கள் தரக்குறைவாக தகாத வார்த்தைகளில் இந்த ஆலையிலிருந்தவர்களை பேசியதாகவும் கூறப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட இரு இடங்களிலும் இடம்பெற்ற (12-ம் பக்கம் பார்க்க)

## நகைத் தொழிற்சாலையில் தங்கப்பவுண் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள நகைத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினமிரவு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பல தங்கப்பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள மூன்று நகைக் கடைகளுக்கு ஓடருக்கு செய்வதற்காக இக்கடைகளுக்குப்பின்னால் உள்ள பட்டடைத் தொழிற்சாலையில் பல பவுணும் வைக்கப்பட்டிருந்ததாக தொழிற்சாலை பொறுப்பாளர் எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு ஓடர் வேலைகளை செய்த பின் மேல்மாடிக்குச் (11ம் பக்கம் பார்க்க)

### இராணுவ முகாம்—

## மண்மூடைகள் சரிந்ததால் போக்குவரத்து பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள நாவற்குழி இராணுவ முகாமின் பாதுகாப்பு அரணாக அமைக்கப்பட்ட மணல் மூடைகள் கடும் மழையினால் சரிந்து வீழ்ந்ததால் நேற்று அம் முகாம் முன் உள்ள பிரதான வீதி போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டது.

கைதடி சந்தியில் வைத்து சகல வாகனங்களும் கோப்பாய் வீதியூடாகத் திருப்பி விடப்பட்டன. கோப்பாய் - சாவகச்சேரி வீதியிலும் முன்னர் கண்ணி வெடியிலே ஏற்பட்ட பாரிய குழிகளில் மழைநீர் நிரம்பியுள்ளதால் அவ்வீதியாலும் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நா)

## 119 துப்பாக்கிகள் பொலிஸார் கைப்பற்றினர்

(தங்காலை)

சட்டவிரோதமாக இயங்கி வந்த துப்பாக்கித் தொழிற்சாலையை பொலிஸார் முற்றுகையிட்டு துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளனர்.

தங்காலை, வெலியத்தை மற்றும் இரு பகுதிகளிலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது. இப்பகுதியிலிருந்து 119 (12ம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்தத்தின் பின்—

## இலங்கையில் 2000 தமிழர் கொலை ஒரு லட்சத்துக்குமேல் அகதிகள்!

### சென்னையில் நெடுமாறன்

(சென்னை)

யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் இராணுவத்தை வலுப்படுத்திக் கொள்வதே இலங்கை அரசின் நோக்கம். கடந்த யூன்மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் அகதிமுகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர் அதிகம் வாழும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தாம் 23 நாட்கள் சுற்றிப்பார்த்ததாகவும் இலங்கை இராணுவத்தின் கொடுமைகளை நேரில் கண்டதாகவும் கூறினார்.

யுத்தநிறுத்தம் என்ற போர்வையில் இராணுவத்தை வலுப்படுத்துவதே இலங்கை அரசின் நோக்கம் என்றுகூறிய நெடுமாறன் இதுசம்பந்தமாக தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பிரதமர் ராஜீவ் காந்தியையும் சந்தித்து உண்மை நிலைபரங்களை தெளிவுபடுத்தப் போவதாகவும் தெரிவித்தார். (12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரி ஜி ளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டு மரத்தளபாடங்கள், மின்சாரப் பாவனைப் பொருள்கள், வீட்டுப்பாவனைப் பொருள்கள், துணிமணிகள் தரமான பொருட்கள் மலிவான விலையில் விற்பனைக்குண்டு சி. பத்மநாதன், C/o, திரு அம்பலவாணர், கொக்குவில் வீரேசன் வீதி, திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடைப்பட்ட இல்லம்) 1534

சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் சரஸ்வதி பாடசாலைக்கு அருகாமையில் பிரதான வீதி ஓரத்தில் சகல வசதிகளுடனும் கூடிய 6½ பரப்பு குடியிருப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: புரொக்டர் ச. கந்தசாமி, கண்டிவீதி, சாவகச்சேரி. (கோட்டடி) 1549

T. V. (Nord-Mende) கலர் 20" ஜேர்மன் தயாரிப்பு. பூஸ்டருடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 51, 70) 4ம் குறுக்குத் தெரு: யாழ்ப்பாணம். 1494

மாமிகுளத்திலிருந்து 6ம் கட்டை வடமராட்சியிலிருக்கும் 10 ஏக்கர் தோட்டக்காணியும், 10 ஏக்கர் தென்காணியும் பிரயோசனத்துடன் விற்பனைக்குண்டு. வாகனங்களுடனும் மாற்றம் செய்யப்படும். "தொடர்பு கொள்ளும் விலாசம்": திரு. மு முத்துத்தம்பி "இளைப்பாறிய ஆசிரியர்", "தெய்வ இல்லம்", மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 1515

இராசவீதியில் கோப்பாய் உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் வீதி அருகில் அகலமான பிரத்தியேக வீதியுடன் கூடிய சகல வசதிகளும் உள்ள திருத்தப்பட்ட குடியிருப்பு/தோட்டக்காணி [செம்மண்] 15 பரப்பு முழுமையாகவோ/பகுதியாகவோ உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: புரொக்டர் கந்தசாமி, கண்டி வீதி, சாவகச்சேரி (கோட்டடி) 1550

7'X6½' புதிய கருக்கு கேற்றும், 6½'X5½' கதவுடன் புதிய லூவர் யன்னலும், ஜெகி மாதபம், கன்றுடன் விற்பனைக்குண்டு: 41/1 அரச வீதி, பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, நல்லூர். 1506

வாங்கிவிட்டீர்களா? எங்கள் மண்ணின் சொந்த உற்பத்தி! பல ஒளியில் தீபாவளி வாழ்த்துக்கள்!! எங்கும் விற்பனையாகின்றன, கன்னிமுனை நிலையம்-புத்தூர். 1489

அல்சேஷன் (Alsation) நாய் குட்டிகள் மூன்று இழமை Pure bred; விற்பனைக்குண்டு. 81, இவன் சேரலில் வீதி, திருநெல்வேலி சந்தி நல்லூர். 1529

ஒறிஜினல் Trailor (றெயிலர்) ஐந்து அணி விற்பனைக்குண்டு. தொடர்பு; எஸ். பாலகுருநாதன், வவுனத்தும்பை றோட், குரும்பசிட்டி. 1559

புதிய பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி சமீர். JEC மேல்மாடி, சாந்தி கினிமா முன், யாழ்ப்பாணம். 1546

5 அந்தர் மேனட் தராசு நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. கிம்கள் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 23/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 1556

## தேவை

யாழ். நகரில் இருக்கும் ஆங்கில மருந்து விற்பனை நிலையத்துக்கு ஆங்கில மருந்து அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் உடனடியாகத் தேவை. தகுந்த ஆதாரத்துடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:-1510, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1510

எல்லாக இன கோழிகளையும் கிலோ 25 ரூபாவுக்கு மேற்பட்ட விலைகளில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளப்படும் விபரங்களுக்கு ஹோட்டல் பரடைஸ், 91. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 23131. 1522

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவில் 155 ம் இலக்க வீடு சகல வசதிகளுடன் தனியார் துறை நிறுவனத்திற்கு வாடகைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 1565

## தேவை

திறமைவாய்ந்த அலுமினியம் ஸ்பின்னேர்ஸ் (Spinners) உடன் தேவை. நேர்முகமாக நேரில் வரவும்: நியூ லங்கா அலுமினியம் தொழிற்சாலை, 80, அரசடி றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 1564

### திகதி மாற்றம்

யாழ். விஜய கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் அதிர்ஷ்டலாபச் சீட்டு குறிப்பிடப்பட்ட 3-11-1985 இருந்து 18-11-1985 இற்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றோம். 1561

## மணப்பந்தல்

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பிரான்சில் (France) பணிபுரியும் 29 வயதுடைய மணமகனுக்கு அழகுள்ள, படித்த செவ்வாய் தோஷமற்ற 25 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மணமகள் பிரான்சிற்குப் போவதற்கு விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும். தொடர்பு விளம்பர இல; 1452, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1452

### தேவை

யாழினி பிக்சேர்ஸின் இரண்டாவது தயாரிப்புக்கு நடிகை, நடிகர்கள் தேவை. சொந்த விபரங்களுடனும் புகைப் படத்துடனும் விண்ணப்பிக்க விலாசம்: யாழினி பிக்சேர்ஸ், 8 ம் வட்டாரம், அல்லைப்பிட்டி. 1573

புங்குடுதீவு நயினாதீவு

ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 5370 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா.5 ம் வைப்புப் பணமாக ரூபா.250/-ம் செலுத்திக் கேள்விப் பத்திரம் கைப் பெற்று 15. 11. 85-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகப் பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்வலப்பின் இடது பக்க மூலையில் "கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். சாக்கு விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| பிறிமா நம்: 1 | 520 |
| பிறிமா நம்: 2 | 1579 |
| 2½ புசல் | 653 |
| அரிசி 67 கிலோ: | 606 |
| அரிசி 50 கிலோ: | 1004 |
| சீனி 50 கிலோ. | 459 |
| தவதானியம். | 169 |
| துண்டு: | 96 |
| கழிவு: | 284 |
| | 5870 |

பொது முகாமையாளர்.

புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு. 1558

## Wanted

DENTAL SURGEONS
DENTAL TECHNICIANS
DENTAL NURSES


Apply;
Dr. K Nithlananthan,
167, (63), Power House
Road, Jaffna 1569

### விற்பனைக்கு

வீடு கட்டக்கூடிய நல்ல குடி தண்ணீர் வசதியுள்ள நெடுங்குளம் தெரு அரியாலையில் அமைந்த 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பகிட்டும்) கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: 252, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். அல்லது சுமனா தேவா, இல; 5, சாசல்லேன், கொழும்பு 4 1578

## முதலாண்டு நினைவஞ்சலி

அருணாசலம் பராசசிங்கம்



தோற்றம்:
28-5-1925

மறைவு:
14-11-1984

எம்குல விளக்கே உங்கள் நினைவு எம்மைப் புனிதப் படுத்துகிறது உண்மையும், உழைப்பும் சிறக்க வாழ்ந்த உங்கள் ஆத்மசாந்திக்கு எமது அஞ்சலிகள்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சிவபதி"
இணுவில் மேற்கு, இணுவில். 1528

உங்கள் அபிமானத்திற்குரிய

## மில்க்வைற் நீல சோப்




புதிய விலை ரூபா 2/- மட்டுமே

நுரை வளம் கூடிய

மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப் பாவித்து மேலுறைகளை அனுப்பி மிகச் சிறந்த பரிசுகளைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி இல 119 செய்தி அல்லது சாந்தி பொன்மொழிகள் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு. கந்தையா சரவணமுத்து

ஓய்வுபெற்ற
ENTOMOLOGICAL ASSISTANT
மலேரியாத் தடைப்பகுதி (A M. C.)

அன்னையின் மடியில்:
13-8-1908



இறைவன் திருப்பாதத்தில்:
3-11-1984

மண்ணின் மணிவிளக்கு
நம்குலத்தின் ஒளிவிளக்கு
அணைந்து ஆண்டொன்று
இன்று ஆத்ம சாந்திக்காய்
இறைஞ்சிடுவோம் ஆண்டவனை

பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள்,
மைத்துனர், மைத்துனியர், பேரப்பிள்ளைகள்; 1557

## நியூ விக்ரேஸ்

### புதிய வீடியோ பட வெளியீடுகள்

வேட்டைக்காரன் — V G P; ஒறிஜினல்
எம். ஜி. ஆர் - சாவித்திரி

சொன்னா நம்பமாட்டீங்க —
வை. ஜி. மகேந்திரன் V.G.P; ஒறிஜினல்

ஏமாற்றாதே ஏமாறாதே — கமரா
விஜயகாந்த் - அர்ச்சனா

அம்மாவும் நீயே அப்பாவும் நீயே
ராஜேஷ் - சரிதா — பிரமிட்

தண்டனை — பிரமிட்
விஜயகாந்த் - அம்பிகா

SAAGAR Hindi) — பிரமிட்
கமல் - ரிஷிகபூர்

அவன் — கமெரா
அர்ஜின் இளவரசி - குயிலி

நியூ விக்ரேஸ்

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,

தொலைபேசி: 23532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரமலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

### அனைத்து மாநிலங்களிலும் இந்தியத் துணிக் கடைகள்— பலசரக்குக் கடைகள்— உணவுச் சாலைகள்!

# அமெரிக்காவில் வாழ்கின்ற இந்தியர்கள்

க. ஜீவகதாஸ்

வந்தோரை வாழ வைக்கும் பூமி என அமெரிக்காவினை அழைக்களாம். கூடவே, புரிந்துணர்வு கொண்ட நாடு (A Land of-Understanding) என்றும் அமெரிக்காவை அழைப்பார்கள்.

எவ்வளவு தான் பலத்த குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாடுகள் இருக்கின்ற போதிலும் அபயம் தேடி வருகின்ற மக்கள், எத்தனையோ இடர்களையும் தாண்டி இங்கு வந்து விடுகின்றார்களாம்.

அமெரிக்காவில் மொத்தமாக சுமார் 27 பல்தேசிய இன மக்கள் வாழ்வதாக, இங்கு கிடைக்கின்ற தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இவற்றுள், ஆசியப் பிராந்தியத்தில் இருக்கும் நாடுகளில் இருந்தும் பெரும் பான்மையான மக்கள் இங்கு வாழ்கின்றார்கள்.

**படிப்படியான குடியேற்றம்**

ஆசியப் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய நாடுகளில் இந்திய மண்ணைச் சேர்ந்தவர்கள் தான் மிகவும் பெரும்பான்மையாக அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் பரந்து வாழ்கின்றனர்.

இவ்வாறு இங்கு வாழ்கின்ற இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 300,000 க்கு மேலாக இருக்கும் இவ்வாறான இந்தியர்கள் பல்வேறு பட்ட நோக்கங்களை, ஆரம்பத்தில் கொண்டு, அமெரிக்காவிற்கு வந்தவர்களாம்.

உயர் கல்வி, தொழில், வியாபாரம், தொழில் நுட்பப் பயிற்சி, சுற்றுலா, திருமணம் போன்றவை மிக முக்கியமான அடிப்படைக் காரணங்களாக இருந்தனவாம்.

இவை போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவில் காலடி வைத்தவர்கள், சில காலம் செல்லத் தமது வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் அமெரிக்காவிலேயே நடாத்தினால் என்ன என்று முடிவு செய்தவர்களாக, பின்னர் படிப்படியாக, அமெரிக்காவிலேயே தமது குடும்பங்களை ஏற்படுத்தி, வாழ்ந்து கொண்டு தம்மை அமெரிக்க இந்தியர்களாக மாற்றிக் கொண்டனர். இந்நிலை இன்றும் இருந்து வருகின்றது.

சிலர், சில காலம் இங்கு தங்கி, நல்ல பணம் சம்பாதித்துக் கொண்டு இந்தியாவில் இருக்கும் தமது ஊர்களுக்குச் சென்று திருமணம் செய்து, பின்னர் மீண்டும் இங்கே வந்து நிரந்தரக் குடியுரிமை பெற்று அமெரிக்கப் பிரஜைகளாகியுள்ளனர்.

**அமெரிக்க இந்தியர்கள்**

இப்பேர்ப்பட்டவர்களை இங்கு அமெரிக்கர்களாக மாறிய இந்தியர்கள் என அழைப்பார்கள் Americanised Indians)

இந்த மக்கள், தம்மை அமெரிக்கர்களாகவோ அல்லது அமெரிக்க குடியுரிமை உள்ளவர்களாகவோ மாற்றிக்கொண்டாலும் கூட இவர்கள் தமது கலை, கலாசாரம், சமயம், மொழி மற்றும் நாட்டுப் பற்றுமிக்கவர்களாகவும் இருக்கின்றனர்.

அதே வேளை இவர் இந்தியாவையும், இந்தியாவில் பெருகி வருகின்ற பிரச்சினைகளையும் மற்றும் சமூக, சமய, அரசியல் நடவடிக்கைகளையும் முற்று முழுதாக வெறுப்பவர்களாக உள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள மொத்தம் 50 மாநிலங்களிலும், பெருந்தொகையான இந்தியர்கள் வாழ்வதன் காரணமாக வியாபாரத்தினை அடிப்படைக் காரணமாகக் கொண்டு இங்கு வந்த இந்தியர்கள் சகல மாநிலங்களிலும் இந்திய பல சரக்குக் கடைகள், உணவு நிலையங்கள் செல்லக் கடைகள் என்பவற்றினை நிறுவியுள்ளார்கள்.

இந்தியர்களின் உணவில் அமெரிக்கர்களுக்குத் தனிப்பிரியம் இருக்கின்றது. விசேடமான தினங்களில் அமெரிக்கர்கள் இந்திய உணவுச்சாலைகளுக்குச் சென்று இந்திய உணவினை ருசித்து உண்டு மகிழ்வார்கள்

இந்த இந்திய மக்கள் இங்கு பல்வேறு விதமான சங்கங்களையும் தமக்குள் உருவாக்கி அவற்றின் மூலம் பல விதமான செயல்பாடுகளைச் ஆற்றி வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து கலை, சமய, நாட்டிய விற்பன்னர்களை இங்கு அடிக்கடி அழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நிதி திரட்டும் பணியில் ஈடுபடுவதுடன் அமெரிக்காவில் இந்து ஆலயங்களையும் சகல மாநிலங்களிலும் கட்டி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கின்றனர்.

தற்சமயம் அமெரிக்காவில் சுமார் ஐந்து அல்லது ஆறு இந்து ஆலயங்கள் மட்டுமே இருக்கின்றன. இவை யாவும் இந்திய மக்களின் பெரும் முயற்சியினாலேயே உருவாக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

**வைபவங்கள் கொண்டாட்டங்கள்**

இந்த இந்து ஆலயங்கள் இங்கு மிகவும் சிறப்புற நடாத்தப் படுவதாகவும் இந்திய இலங்கை சைவசமயத்தவர்களுடன் சைவ சமயத்தவர்களாக மாறிய அமெரிக்கர்களும் கூட இங்கு, வழிபாடு செய்வதாகவும் தெரிகின்றது.

வருடா வருடம் இடம்பெறுகின்ற இந்து சமயக் கொண்டாட்டங்களான தீபாவளி, தைப்பொங்கல், பட்டிப் பொங்கல், விஜயதசமி பூசை, மற்றும் இந்திய சுதந்திர தேசிய தினம் போன்ற முக்கியமான தினங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற இந்தியர்கள் பொது இடங்களில் கூடிக்கொண்டாடி மகிழ்கிறார்கள்.

பெரும்பாலான மாநிலங்களில் இந்தியர் சங்கங்கள் மிகவும் பலம் பொருந்தியவையாகவும் இருக்கின்றன.

**'இந்தியா அப்ரோட்'**

நியூயோர்க்'கில் இருந்து வாரா வாரம் இந்தியா அப்

(10-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைப் புரளி?

முப்பத்தாறு வயதுடைய பிரிட்டனின் இளவரசர் சார்ல்ஸ் எழுப்பியிருக்கிற இதயக்குரல் எப்பவோ கேட்ட குரலை நினைவுபடுத்துகிறது.

ஆம்! அவரது பாட்டனார் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் அண்ணர் எட்வார்ட் மன்னர் ஒருமுறை எழுப்பியகுரல்,

அன்று 1936ல் வேல்ஸின் உருக்குத் தொழிலாளர்கள் பணி வேலையின்றி வாடியபோது பெரிய பாட்டனார் எட்வார்ட் அவர்களுக்காககுரல் எழுப்பினார்.

இன்று பிரிட்டனின் நகரங்கள் சிலவற்றில் நடைபெறும் இனக்கலவரங்களைக் கண்டு கவலையுற்ற மன்னனுக்குரிய கருணை உள்ளத்துடன் கருத்து வெளியிட்டிருக்கிறார் இளவரசர் சார்ல்ஸ்.

அன்று பட்டத்துக்கு வந்த எட்வார்ட் மன்னர் முடிசூடு முன்னரே பதவி துறந்தார். மக்கள் மன்னன் தம் திருமண விடயமாக எழுந்த நெருக்கடியை நன்கு பயன்படுத்தி அன்றைய பிரதமர் Baldwin பெயருக்குமாறாக மன்னனைக் கழற்றுவதில் வெற்றி (win) பெற்றார்.

இன்று மன்னனாக வரக்காத்திருக்கும் இளவரசர் சார்ல்ஸ் எங்கோ ஒரு வைபவத்தில் மனந்திறந்து பேசியது சர்ச்சை கிளப்பிவிட்டது.

மக்கள் குறிப்பாக கறுத்தவர் மன்னரின் கருத்தைப் பாராட்டுகின்றனர். 'சண்டை செய்பவர்களெல்லாம் பயங்கரவாதிகள்' என்ற தாட்சரின் ஆட்சி நினைப்பது தவறு. இளவரசரின் கருணை மன்னனின் சிறப்பு என்றெல்லாம் பேசப்படுகிறது.

எந்தச் சர்ச்சையிலும் ஈடுபடாது மரபைக் கட்டிக் காத்துவருகிறார் 62 வயதுடைய மகாராணி எலிஸபெத். மகனின் கருத்து பத்திரிகையின் திரிப்பு என்று பக்கிங்காம் அரண்மனை கருதுகின்றது.

பத்திரிகைகள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய பொறுப்பை உணர்ந்த நாம் துண்டுப்பிரசுரங்கள் வெளிவருவதில் வியப்படையவில்லை.

## வரதட்சணையும் கல்யாண ஆடம்பரங்களும்

சாஸ்திரம் விதிக்கிற வயசை மீறுவதற்கு சட்டம் காரணம் என்றால் சட்டம் போட்டிருக்கிற 'லிமிட்'டையும் மீறி 25 வயசு 30 வயசுக்குக் கூடப்பெண்கள் கல்யாணமாகாமல் நிற்பதற்குக்காரணம் விவாஹத்தைப் பண சம்பந்தமான விஷயமாக்கியிருப்பதுதான். இப்போது கல்யாணத்தில் நடக்கிற ஆடம்பரங்களும் வரதட்சிணை வாங்குவதும், சீர்செனத்தி கேட்பதும் சாஸ்திர சம்மதமானதல்ல. செலவழிப்பதற்குப் பெண் வீட்டுக்காரன் என்று ஒருத்தன் ஏற்பட்டிருக்கின்றான் என்பதால் அவனிடம் ஒட்டக்கறக்கவேண்டும் என்பதற்காகவே "பிள்ளைக்கு ஸூட் வாங்கித்தா; பூட்ஸ் வாங்கித்தா; ரிஸ்ட்வாட்ச் வாங்கித்தா" என்று பறிமுதல் மாதிரிப்பண்ணி இந்த அலங்காரங்களோடு ஜானவாஸ ஊர்வலம் என்று ரொம்பவும் அத்தியாவசியமான அம்சம் மாதிரி விவாஹத்துக்கு முதல்தினம் பண்ணுகின்றார்களே இது சாஸ்திரத்தில் அடியோடு இல்லாத விஷயம். இதற்கு ஒரு மந்திரமும் கிடையாது

பழையநாளில் அதிபால்யத்தில் விவாஹமானதால் "குழந்தைகளை உத்ஸாஹப் படுத்தவேண்டும். ஹோமப் புகையில் கஷ்டப்படுகிறதுகளே!" என்று விளையாடல், நலுங்கு, ஊர்வலம் என்றெல்லாம் வைத்தார்கள். அவ்வளவுதான்.

"கன்யாம் கனகஸம்பந்நாம்" என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால் தங்கமானது லக்ஷ்மீ பிரஸாதத்தை உண்டாக்குவது என்பதால் தங்கத்தில் திருமாங்கலியம் மட்டும் பண்ணினால் போதும். மற்றநகைகள், வைரத்தோடு முதலியன வேண்டாம். பட்டும் வேண்டாம். நூலில் கூறைப்புடவை வாங்கினால் போதும் ஆந்திர தேசத்தில் இப்படித்தான் செய்கிறார்கள். எல்லாவற்றையும் விட வரதட்சணை தொலைய வேண்டும். ஊர்கூட்டி சாப்பாடு, பாட்டு, சதிர், பந்தல் என்று விரயம் பண்ணுவதும் போகவேண்டும்:

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

நன்றி: கல்கி

தருபவர்: கணேஸ்



'குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' நிதியத்தின் தலைவியான இளவரசி ஆன் (மார்க் பிலிப்ஸ் சீமாட்டி) தெற் லண்டனிலுள்ள குழந்தைகளுக்கான றெயின்போ பிளேகுரூப் (Rainbow Play group) என்ற குழந்தைகளுக்கான இல்லத்துக்கு விஜயம்செய்த போது அங்குள்ள உதவியாளர் ஒருவருடன் மகிழ்வுடன் உரையாடுகிறார்.

"குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" நிதியம் உலகம் முழுவதும் மேற்கொண்டுவரும் பணிகளைப் பற்றி அறிவதற்காக இளவரசி ஆன் பலநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்நிதியம் சுயேச்சையான நிறுவனம். உலகம் முழுவதும் துன்பமுறும் குழந்தைகளைக் கவனிப்பதற்கும், தேசம், இனம், மதவேறுபாடின்றிக் குழந்தைகளின் நலனுக்கு உதவுவதற்கும் இந்நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. சுமார் 50 நாடுகளில் வசிக்கும் ... இந்நிறுவனத்தின் சார்பில் டாக்டர்கள், தாதிகள், நலன்புரி பவர்கள் மற்றும் பலர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஓர் ஆய்வு நோக்கு

# வறண்ட வலயங்களில் மழை நீரைத் தேக்கும் திட்டம் அவசியம்

★ செ. பாலச்சந்திரன்
தலைவர், புவியியற்றுறை
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணக் குடா நாடு இலங்கையின் வறண்ட வலயத்தின் ஒரு பகுதியாகும். மழைவீழ்ச்சி ரீதியாகப் பார்க்கும் போது வருடத்தில் எட்டு மாதங்களுக்கு மேல் உள்ள பருவம் ஈரம் அற்றது எனப்படுகின்றது. அதாவது இந்த மாதங்களில் அற்ப சொற்ப மழை இருந்த போதும் அது வறட்சியைத் தாங்கக் கூடியதாய் இல்லை. இந்நிலையில் தரைக்கீழ் நீர் இப் பகுதியின் மழைகாலத்தில் பொதுவாகவும் மழையற்ற காலத்தில் சிறப்பாகவும் இப் பகுதியின் தேவையை ஈடு செய்கின்றது. மழையற்ற நீண்ட பருவம், அப்போது செயற்படும் நீரியல் வறட்சி, அதனாலேற்படும் நீர்பற்றாக்குறை ஆகியவற்றை தரைக்கீழ் நீரின் பாவனை நிவர்த்திக்க உதவுகின்றது.

அதேசமயம் இந்த தரைக்கீழ் நீரின் மட்டத்தைத் தொடர்ந்து பேணுவதில் பருவ மழைவீழ்ச்சி ஒரு முக்கிய நிகழ்வாகும். ஆயினும் இம் மழை பெருவெள்ளமாக மாறும் போது அநேகமாக நீர் வெளியோடி சடங்கடைகின்றது. இச்சமயத்தில் தரையின் ஊடாகத் தரைக்கீழ் நீருடன் சேரும் நீரின் அளவு குறைகின்றது. ஆகவே பங்கிடப்பட்ட சாதாரண மழை வீழ்ச்சியே தரைக்கீழ் சேமிப்புக்கு ஏற்றதாக இருக்கும். இந்நிலைமை பெருமளவுக்கு ஈரபருவத்திலுண்டு.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் பெப்ருவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை உள்ள காலம் வறண்ட காலமாகும். இக்காலத்தில் மழையை சாதாரணமாகவேனும் எதிர்பார்க்க முடியாது. ஆயினும் இந்த மாதங்களில் அசாதாரண அதாவது திடீர் மழை வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளதை கடந்த கால நிகழ்வுகளிலிருந்து நாமறியக் கூடியதாயுள்ளது. இப்படியான மழை சிறந்த பயனை அளிக்கும். இச்சமயம் இது பெருவெள்ளமாக மாறுவதுமுண்டு. ஆயினும் இது உயிர்ச்சூழலுக்கு ஒருபுது மெருகு ஊட்டுகின்றது. சிறப்பாக மண்ணுக்கு ஈரத்தை அளிக்கின்றது. ஒரு விதத்தில் தரைக்கீழ் நீருக்கும் நன்மையை ஏற்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக 1984-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் அசாதாரணமான மழையை யாழ்ப்பாணக் குடாநாடு மாத்திரமல்ல வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் பெற்றதை நாமறிவோம். பொதுவாக பெப்ருவரி மாதம் மழையை எதிர்பார்க்க முடியாது. சராசரியாக யாழ்ப்பாணத்தில் 1.84 அங்குலங்கள் மட்டுமே இம்மாதத்தில் எதிர்பார்க்கலாம். இங்கு மழை நாட்களும் ஆகக் கூடியது இரண்டு தான் இடம் பெறும். ஆனால் 1984-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் ஏறக்குறைய 15 நாட்கள் மழை நாட்களாக இருந்தன. 22.0 அங்குலங்கள் பெய்து பெருவெள்ளம் ஏற்பட்டது. இவ்வாறான நிகழ்வு ஆச்சரியமாக அவதானிக்கப்பட்ட போதிலும் இப்படியான நிகழ்வுகள் இடைக்கிடை கடந்த காலங்களிலும் நிகழ்ந்துள்ளன. 1922-ம் ஆண்டு இதே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 5.23 அங்குலம் மழையாகப் பெறப்பட்டது. இந்த மாதத்தில் 10 நாட்கள் மழை நாட்களாக இருந்தன. இதேபோல 1925, 1928, 1938, 1 47 ம் ஆண்டுகளுக்குரிய பெப்ருவரி மாதங்கள் ஒவ்வொன்றிலும் 4 00 அங்குலங்களுக்கு மேலாக மழை பெறப்பட்டது. 1935, 1960, 1965-ம் ஆண்டுகளுக்குரிய பெப்ருவரி மாதங்களிலும் தலா 6 00 அங்குலமழை பெறப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தமாதிரி ஏப்ரக் மாதத்திலும் அதிகமழை பெருவெள்ளம் ஆகியன ஏற்படுவது வழக்கம். இவற்றுக்குக் காரணமாக வடகீழ்பருவக்காற்று, வங்காள விரிகுடா அமுக்க இறக்கங்கள், அவற்றின் நகர்வுகள் கூறப்படுகின்றன. ஆராய்வு ரீதியில் இவற்றுக்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் மழை எதிர்பார்ப்புக் குறைந்த நிச்சயமான வறட்சி மாதங்களில் அதாவது மே யூன், யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களிலும் இப்படியான மழைவீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். 1965-ம் ஆண்டு யூலை மாத மழையும் அவ்வாறான நிகழ்வுகளில் ஒன்றாகத் தானிருக்க முடியும்.

### பருவ மழை வீழ்ச்சி

யாழ். குடாநாட்டு மழை வீழ்ச்சியில் பெரும் பங்கு குறிப்பாக ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பெறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் இம் மாதங்களில் முறையே 9 87, 17.13, 11 80, 3 95 அங்குலங்கள் சராசரியாகப் பெறப்படுகின்றன இத்தொகை குறிப்பிட்ட பகுதிக்குரிய வருடச் சராசரி மழைவீழ்ச்சியில் 75 4[illegible]% ஆகும். இக்குறிப்பிட்ட மாதங்களில் யாழ். குடா நாட்டு ஏனைய பகுதிகளிலும் இதே நிகழ்வு தான் உண்டு. எடுத்துக்காட்டாக காங்கேசன்துறையின் வருடச் சராசரி மழையில் இம் மாதங்களில் 77.63% பெறப்படுகிறது. இதேபோல ஊர்காவற்றுறையில் 76 32% மும் நெடுந்தீவில் 78 56% மும் பலாலியில் 81 15% மும் பெறப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இவையே பருவ மழைவீழ்ச்சியுடைய மாதங்கள் எனலாம். இம் மழைக்கு நிச்சயமாக வங்காள விரிகுடா அமுக்க இறக்கங்கள் தாழமுக்கங்கள், சூறாவளிகள் ஆகியவற்றின் நகர்வுகளும் வடகீழ்ப் பருவக் காற்றும் ஒருமித்தும் தனித்தும் காரணமாகின்றன. ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய மழை பெருமளவுக்கு வங்காள விரிகுடா நிகழ்வுகளால் தீர்மானிக்கப்படுகிறது. டிசம்பர், ஜனவரி மாதமழை பெருமளவுக்கு வடகீழ் பருவக் காற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. ஒக்ரோபர், ஏப்ரல் மாத மழையில் அயனத்து இடம் மாறும் ஒருங்கல் வலயமும் குறிப்பிடத்தக்களவு பங்கு அளிக்கின்றது. தொடர்ந்து பெப்ருவரி தொடக்கம் மே மாதம்வரை வங்காள விரிகுடா நிகழ்வுகளால் யாழ். குடாநாட்டிற்கு சிறு மழை பெற வாய்ப்புண்டு யூன்மாதத்தில் அதற்குரிய வாய்ப்பு பெரும்பாலும் இல்லையென்று கூறலாம். ஆனால் யூலை மாதத்தில் ஏறக்குறைய மூன்று சூறாவளிகள் நிகழக் கூடிய சந்தர்ப்பமுண்டு. ஆகஸ்ட் மாதத்தில் சூறாவளிக்குரிய வாய்ப்புக்களில்லை.

### வறண்ட பருவம்

யாழ்ப்பாணத்தில் சோளகக் காற்று எனக்கூறப்படும் தென்மேல் பருவக்காற்று யாழ். பிரதேசத்தைப் பொறுத்தவரையில் ஓர் வறண்ட காற்றாகும். இது இலங்கையின் ஒரு பகுதியை ஈரமாக்கும். அதே சமயம் இன்னொரு பகுதிக்கு வறட்சியைக் கொடுக்கும் காற்றாக வீசுகின்றது. இதற்கு இலங்கையின் தரையுயர்ச்சி வேறுபாடு இன்னொரு காரணமாக இருந்த போதிலும் பொதுவாக மே, யூன், யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் இக்காற்றால் மழையை நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. வறட்சியையும், தூசியையும் கொண்ட காற்றாகத்தானிது வீசுகின்றது. ஆயினும் இந்த மாதங்களில் சராசரியாக மிகக் குறைந்த மழை இடம் பெறுவதும் இங்குகுறிப்பிடவேண்டிய அம்சமாகும். சராசரி என்பது சாதாரணமாக முப்பதுக்கு மேற்பட்ட நிகழ்வுகளை ஒன்று கூட்டியே பெறப்படுகின்றது. ஆகவே பல மழைச் சிதறல்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டுத்தான் ஆங்கு நோக்கப்படுகிறதென்பது முக்கியமாகும்.

மேற்குறிப்பிட்ட ஐந்து மாதங்களிலும் யாழ்ப்பாணத்தில் 7 26" அங்குலங்கள் சராசரி மழையாகப் பெறப்படுகின்றது இது வருடச் சராசரியை நோக்கும் போது அதன் 12 8%மாகும். காங்கேசன்துறையை எடுத்துக்கொண்டால் 6.59 அங்குலங்கள் இந்த வறண்ட பருவத்தில் பெறப்படுகிறது. இதுமொத்தத்தில் 18.37% மாகும். இதேபோல ஊர்காவற்றுறையில் 5 87 அங்குலங்களும் [12.03%] நெடுந்தீவில் 4.18 அங்குலங்களும் [10 48%] பலாலியில் 4.71 அங்குலங்களும் [9 33%] இந்தச் சோளகக் காற்றுப் பருவத்தில் மழையாகப் பெறப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் மிகக் குறைந்தமழையைப் பெறுகின்ற இடம் நெடுந்தீவு எனலாம். அதே போன்று இந்த வறண்ட பருவத்திலும் மிகக் குறைந்த மழையைப் பெறுவதும் நெடுந்தீவு தான். அதாவது சுற்றிவர உள்ள நீர்ப்பரப்புக்களிலிருந்து உருவாகும் நீராவி தீவுப்பகுதிகளுக்கு மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் மழையைக் கொடுக்க பயன்படுவதில்லை. மேற்கூறியவாறு மிகக் குறைந்த மழையைப் பெறும் இந்தப் பருவத்தின் சிலகாலங்களில் கூடிய மழைவீழ்ச்சியும் இடம்பெற்றுள்ளது. வறண்ட பருவத்தின்மாதங்களில் இடம் பெற்ற மழை வீழ்ச்சியை நோக்கினால் மேற்கூறிய கருத்து துப்புலனாகும். இது வறண்ட மாதங்களுக்குரிய சிறப்பியல்பு எனலாம்.

### மே மாத மழைவீழ்ச்சி

இந்த மாதம் தென்மேல் பருவக் காற்றின் ஆரம்ப மாதம் எனலாம். இம் மாதத்தில் யாழ்ப்பாணம், காங்கேசந்துறை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, பலாலி ஆகியவற்றில் முறையே 2 67, 1. 86, 2 17, 1 70, 2 20 அங்குலங்கள் மழையாகப் பெறப்படுவது வழமையானதாகும். மழை நாட்களும் சராசரியாக இரண்டு தொடக்கம் நாலு நாட்கள் வரை அமைந்திருக்கும். ஆயினும் இவற்றுக்கு முரணாக சிலஆண்டுகளுக்குரிய மே மாதங்கள் கூடிய மழையைப் பெற்றுள்ளன.

இப்படியான சந்தர்ப்பங்கள் பெரு வெள்ளமாகவும் ஏற்படுகின்றன. மக்கள் இதனை "சித்திரை வெள்ளம்" என அழைப்பர்! ஏனெனில் மே மாதத்தின் பிற்பகுதியிலும் தமிழ்ச் சித்திரை மாதத்தின் முற்பகுதியிலும் இம் மழை பெய்கின்ற காரணத்தால் இப்பெயர் கொண்டழைத்தனர். எடுத்துக் காட்டாக 1930 - ம் ஆண்டு மே மாதம் 10 59" அங்குலங்கள் யாழ்ப்பாணத்தில் பெறப்பட்டன. மழை நாட்கள் ஐந்தாக இச் சமயத்திலிருந்தன 1943-ம் ஆண்டு மே மாதம் 18 97 அங்குலங்கள் மழையாகப் பெய்தது. இந்த மழை எட்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்தது. 1966, 1949 - ம் ஆண்டுகளிலும் ஏறக்குறைய தலா நான்கு அங்குலங்கள் பெறப்பட்டன. 1962 லும், 1977-லும் தலா ஐந்து அங்குலங்கள் பெறப்பட்டன. இதே போக்கு சற்றேறக்குறைய யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது இதற்குரிய காரணத்தை ஆராயும் போது குறிப்பிடத்தக்க உண்மை ஒன்று புலனாகின்றது. தென்மேல் பருவக்காற்றின் ஆரம்ப பருவத்தில் மலாக்க ஒடியரசுப் பகுதியிலிருந்து இந்தியாவின் தென்மேற்கு மேற்குக் கரைநோக்கி கூடிய நீராவி உள்ளடக்கம் கொண்ட காற்று ஒன்று வீசுகின்றது. சில காலங்களில் இக்காற்றின் சில ஒதுக்குகள் பாக்குநீரிணை ஊடாக இலங்கையின் வடமேற்குக் கரையை நோக்குவதால் எமது பிரதேசமும் சராசரிக்கு மாறாக கூடிய மழையைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது இச்சமயம் இது வங்காள விரிகுடா அமுக்க இறக்கங்களை பாதிக்காட்டாத ஒரு நிகழ்வாகவும் இருக்கின்றது.

### ஜூன்மாத மழை வீழ்ச்சி

யூன், யூலை ஆகஸ்ட் மாதங்கள் மழை வீழ்ச்சியில் மிக வறண்ட மாதங்களாகும். இக்காலத்தில் மண்ணின் ஈரம் வறட்சியைக் குறைக்க தரைக்கீழ்நீர் தவிர] உதவுகின்றதெனலாம். யூன் மாதத்து யாழ் குடாநாட்டு மழைவீழ்ச்சி சராசரியாகப் பின்வரும் நிலையிலமைந்துள்ளது. யாழ்ப்பாணம் 0 57, காங்கேசன்துறை 0.56 ஊர்காவற்றுறை 0 51 நெடுந்தீவு 0 22 பலாலி 0 24 அங்குலங்களாகும் இத்தொகை நிச்சயமாகப் பெறப்படும் என்பதில்லை, மழைநாட்களும் ஒன்றுக்குமேல் இல்லை. பொதுவாக அதிகமழை பெற்ற யூன் மாதங்களை மே மாதங்களுடன் ஒப்பிடும் போது யூன் மாதங்களில் அதிக மழைக்குரிய சந்தர்ப்பங்கள் குறைவென்றே கூறவேண்டும். அவ்வாறு நோக்கும்போது இம்மாதத்தில் 1944-ம் ஆண்டு 3 62 1956-ம் ஆண்டு 2 71 1959 ம் ஆண்டு 5 36 1967-ம் ஆண்டு 2 11 மழையாகப் பெய்துள்ளது இம்மாதத்தில் முன் கூறியதுபோன்று தென்மேல் பருவக்காற்றின் தாக்கம் காரணமாக இவ்வாறான மழை நிகழ்ந்திருக்கலாம். அதே சமயம் வங்காளவிரிகுடா அமுக்க இறக்கங்களுக்கு இந்த மாதத்தில் சந்தர்ப்பம் இல்லையெனலாம்

இன்று இம்மாதத்தில் நிகழும் மழைவீழ்ச்சி பற்றிக் கருதும் போது பொதுவாக வழக்கத்திற்கு மாறானது எனச் சில எண்ணுகின்றனர். வயதில் கூடியோர் ஏற்ற கருத்தை எடுத்துக் காட்டுவர். கடந்த ஆண்டுகளின் யூலை மாதத்தில் இத்தகையமழை பெய்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக 1981 யூலையில் ஏறக்குறைய 4 00 அங்குலங்கள் பெறப்பட்டன. மேலும் 1954-ல் 1 80, 1952-ல் 2 66 1960 - ல் 4.4 அங்குலங்களும் பெறப்பட்டன. 1963-ல் காங்கேசன்துறையில் 4 6 அங்குலங்கள் பெறப்பட்டன. மழை நாட்களும் இம் மாதத்தில் நான்கு தொடக்கம் ஏழு நாட்கள் வரை காணப்பட்டன. இதே சமயம் இந்த மாதத்துக்கான சராசரி ஏறக்குறைய யூன் மாதம் போன்ற நிலையைக் கொண்டுள்ளது முன்பு குறிப்பிட்ட ஐந்து நிலையங்களிலும் முறையே 0 99. 0 73, 0 67, 0 31. 0 36 அங்குலங்கள் தான் மழை வாய்ப்பாக உள்ளது சராசரியாக மழை நாட்களும் ஒன்றுக்குமேலில்லை.

(10 ம் பக்கம் பார்க்க)




## சனி பகவான் சஞ்சாரம்

குரோதன வருஷம் ஐப்பசி மாதம் 18-ந் திகதி 03-11-1985 அன்று ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு 4 நாடி 05 விநாடியின் மேல் விருச்சிக ராசிக்குள் சஞ்சாரம் செய்யும் சனிபகவானின்;

### பொதுப்பலன்

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நக்ஷத்திரங்கள் கொண்ட விருச்சிக ராசிக்குள் சனி பகவான் பிரவேசிப்பதால், நாட்டில் அரசியல் பிளவுகள் தீவிரமாவதோடு உணவுக் கஷ்டமும் ஏற்படும்.


குறிப்பாக பஞ்சமும், தொற்று நோயும் பரவும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன அதிக மழையும் சூறாவளிகளும் ஏற்பட இருப்பதால் விவசாயத்துறையில் சிறுவிழ்ச்சி தென்படும்.

மக்கள் மத்தியில் மனக்குழப்பங்களுக்கும் இடமுண்டு. வியாபாரிகள் சிறு கஷ்டங்களை எதிர்நோக்குவர். சனிபகவான் இரண்டரை வருஷத்துக்கு விருச்சிகராசியில் இருந்து மேற்கூறிய பலாபலனைச் செய்வார்

மேலும் 1986-1-23 இல் குரு பகவான் சனிபகவானின் ஆட்சிவீடாகிய கும்பராசிக்குள் பிரவேசிப்பதால் 1986 1-23 க்கு மேல் இதில் சில மாற்றங்களுக்கு இடமுண்டு.

வே. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'செங்கை ஆழியான்'

## பகுதி ஒன்று: ஆக்கல்

1455-ஆம் ஆண்டு மாரி கால நண்பகல் கருக்கலில் மாவிட்டபுரக்கந்தனாலயத்தின் வெளிமண்டபத்தில் சின்ன மனத்துளார் ஓய்வாக அமர்ந்திருந்தார். முதல்நாளிலிருந்து தொடர்ந்துபெய்த மழை அப்போதுதான் சற்று விட்டிருந்தது. நண்பகல் உச்சிக்காலப் பூசையை முடித்துவிட்டு, அவர் அமர்ந்திருந்தபோது மீனலோசினி அங்கு வந்தாள்.

அவள் நாம் முன்னர் பார்த்ததிலும் அழகு பெற்றிருந்தாள். உயர்ந்து மெலிந்த உடலில் சற்றுத்தசை விழுந்திருந்தது. தாவணியோடு காணப்பட்ட அவள் இப்போது அழகாகச் சேலை அணிந்திருந்தாள்.

"அப்பா..." என்றபடி அவரின் அருகில் அமர்ந்துகொண்டாள் மீனலோசினி.

"என்னம்மா?..." என்று தந்தை ஆதரவோடு கேட்டார்?"

"தொண்டைநாட்டிலிருந்து வல்லியத்தேவன் வந்திருந்தாரே?"

உப்பதிகாரியாக இருந்த வல்லியத்தேவன், கனகசூரிய சிங்கை ஆரியன் தன் குடும்பத்துடன் தொண்டைமண்டலத்திலுள்ள திருக்கோவிலூருக்குத் தப்பிச்சென்றபோது, கூடவே சென்றிருந்தான். அங்கிருந்து அடிக்கடி ஈழத்திற்கு வருவான். இங்குள்ள நிலைமைகளை அறிந்து செல்ல வருபவன், சின்னமனத்துளாரிடமும் தவறாது வந்து செல்வான்.

"மன்னர் எப்படியாம், அப்பா?..." என்று மீனலோசினி கேட்டாள் அவள் குரலில் ஆவல் தொனித்தது.

"எந்த மன்னரைக் கேட்கிறாய், அம்மா? இங்குள்ள இன்றைய மன்னர் ஸ்ரீசங்க போதி புவனேசபாகுவைக் கேட்கிறாயா? அல்லது திருக்கோவிலூரில் காத்திருக்கும் பழைய மன்னர் கனகசூரிய சிங்கை ஆரியரைக் கேட்கிறாயா?"

சப்புமல்குமரயா என்ற செண்பகப்பெருமாள், யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றி வெற்றிகொண்டதும், ஜயவர்த்தனபுரக் கோட்டைக்கு மீண்டு சென்றான். 'சென்ற இடமெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய பெருமாளை பராக்கிரமபாகு, களிப்பால் "ஆரிய வேட்டையாடும் பெருமாள்" எனப்புகழ்ந்து, யாழ்ப்பாணத்தையே அரசு புரியுமாறு அனுப்பி வைத்தான். யாழ்ப்பாண அரசிற்கு மீண்ட சப்புமல்குமரயா, பழைய நகரம் பாழடைந்து போனமையால் நல்லூரில் புதியதொரு நகரமெடுப்பித்து, ஸ்ரீசங்க போதி புவனேசபாகு என்ற சிங்காசனப் பெயரோடு முடிசூட்டிக்கொண்டான்."

மீனலோசினி தகப்பனைக் கோபத்தோடு பார்த்தாள்.

"அப்பா, என்னைப்பொறுத்தவரையில் நான் மன்னராகக் கருதுவது, கனகசூரிய சிங்கை ஆரியரைத்தான். வேறு ஒருவரையுமல்ல. மதங்கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று, சிங்கைநகரின் வீதிகளில் இரத்தவெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரின் விளங்கிய மாடமாளிகைகளை வெல்லாம்இடிப்பித்துஎரியூட்டி எல்லாவற்றுக்கும் உச்சமாக நல்லூரில் எம்பெருமான் கந்தவேளின் ஆலயத்தையே மூலஸ்தானத்துடன் தகர்த்தெறிந்த வெறிபிடித்த சிறிசங்கபோதி புவனேசபாகுவை ஒருபோதும் எம்மன்னராக ஏற்றுக்கொள்ள என்மனம் இடந்தரவில்லை."

உணர்ச்சிவசத்தோடு மீனலோசினி கூறியவற்றைச் சின்ன மனத்துளார் வியப்போடு அவதானித்தார்.

"நீ சொல்வதைப் பார்த்தால், இளவரசர் படையோடு இங்குவரும்போது நீயும் அவர்களுடன் சேர்ந்துவிடுவாய் போலிருக்கிறதே?" எனச்சிரித்தார் அவர்.

"இளவரசர் படையோடு வருவாரா? இழந்த இராச்சியத்தைமீண்டும்பெறுவாரா?" என அவள் ஆதங்க ஆர்வத்துடன் கேட்டாள்.

"அப்பா கூறுங்கள் விளக்கமாகச் சொல்லுங்களேன்..."

அவர் மகளை அன்புடனும் கவலையுடனும் பார்த்தார்.

"அப்படித்தான் வல்லியத்தேவன் சொல்கிறான். திருக்கோவிலூரில் இளவரசர்கள் போர்ப்பயிற்சி பெற்றுவருகின்றார்களாம். விஜயநகர் மன்னன் தருணம் வரும்போது படைதந்து உதவுவதாகக் கூறியிருக்கிறாராம். அவர்களை மட்டும் நம்பியிருப்பதில் பயனில்லை.

## தீவினைக்கு கழுவாய்

அதனால் வல்லியத்தேவன் போன்ற நம்பிக்கைக்குரியவர்கள் யாழ்ப்பாண அரசில் இரகசியமாகப் படை திரட்டுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். திருமலை வன்னிமை தக்க தருணத்தில் படைதந்து உதவுவதாகக் கூறியிருக்கிறார். ஆக இன்னும் ஐந்தோ ஆறோ ஆண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் மீண்டும் சிங்கை ஆரியர் வசமாகும்...'

"அவ்வளவு காலம் செல்லுமா..."

"உனக்கு யாழ்ப்பாணத் தமிழ் மக்களைப்பற்றித் தெரியாது மகளே. அவர்கள் ஐந்தாண்டுகளுள் கனகசூரிய சிங்கை ஆரியரை மறக்கத் தொடங்கிவிட்டார்கள். யார் ஆண்டால் என்ன என்ற மனநிலையில், புதிய மன்னர் சிறீ சங்கபோதிபுவனேசபாகுவைப் படிப்படியாக ஏற்றுக்கொள்ளத்தொடங்கிவிட்டார்கள்..."

மீனலோசினி சற்று நேர மௌனமாகவிருந்தாள். அவள் சிந்தையில் இளவரசன் சிங்கைப் பரராசசேகரன் ஒருகணம் தோன்றிச் சிரித்தான்.

"சின்னமனத்துளார் மகளே நீ அழகாக இருக்கிறாய்." என்று கூறிய வார்த்தைகள் அவள் காதுகளில் மீண்டும் ஒருதடவை ஒலித்தன

'இந்த நாட்டின் வருங்கால மன்னன் திருக்கோவிலூரில் என்ன கஷ்டப்படுகிறானோ?'

அவள் கண்களில் கனவுகள் மலர்வதை அவதானியாது சின்ன மனத்துளார் தொடர்ந்தார். "இப்போது நல்லூரை நீ பார்க்க வேண்டும், அம்மா. அப்படியே அசந்திடுவாய். அழிந்து போன சிங்கை நகருக்கு இணையாக அதனை மன்னன் கட்டி எழுப்பியிருக்கிறான். மாட மாளிகைகள், குளங்கள் அழகான பூந்தோட்டங்கள், பாதுகாப்பு அரண்கள், பெருந்தெருக்கள் என நல்லூர் புதுத் தோற்றம் பெற்றிருக்கின்றது. மன்னனின் அரண்மனை மந்திரி மாளிகைக்கு அருகில் அமைந்திருக்கின்றது!"

சிறீசங்கபோதி புவனேசபாகுவின் அரண்மனை அமைந்திருந்த அந்த இடம் பண்டார மாளிகை என வழங்கும் என்றும் அதே காணியில் பின்னர், ஒல்லாந்தர் தமது ஓய்வுகால மாளிகை அமைப்பார்கள் என்பதும், ஐந்நூற்றுமுப்பத்தைந்து ஆண்டுகளின் பின்னர் என்ன நடக்குமோ என்பதும் யாருக்குத் தெரியும்? சின்னமனத்துளாருக்கு அன்று நிச்சயம் தெரிந்திருக்க நியாயமில்லை.

"என்றாலும் அப்பா, நீங்கள் கனகசூரிய சிங்கை ஆரியருக்குக் கொஞ்சம் கூட விசுவாசமில்லாதவர். அதனால் தான் நீங்கள் புவனேசபாகு அழைத்தபோதெல்லாம் நல்லூருக்கு ஓடுகிறீர்கள்."

"அப்படியில்லை அம்மா. நான் பிராமணன். இருவருக்குந்தான் விசுவாசமாக இருக்க முடியும். ஒருவர் நாம் பூசை வழிபாடு செய்யும் ஆண்டவன்; மற்றவர் நம்மை ஆளும் மன்னவன். ஆண்டவனிடம் எல்லாரின் சேமத்துக்காகவும் தாம் நான் வேண்டுகின்றேன்."

"நீங்கள் எப்போதும் மன்னர்களுக்கும் மந்திரிகளுக்கும் விசுவாசமானவர்கள் தான்."

"உண்மை தான், அம்மா. இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன், எனது மூதாதையர் ஒருவர் - அவர் பெயரும் சின்னமனத்துளார் தான் இருந்தார். அப்போது யாழ்ப்பாண அரசின் மன்னராக காலிங்கைச் சிங்கை ஆரியன் இருந்தார். அவர் மந்திரியாக புவனேசபாகு என்றும், புவனேசவாகர் என்றும் அழைக்கப்படும் பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார்."

"இந்தப் புவனேசவாகர் தானா நல்லூரில் குருக்கள் வளவில் கந்தவேள் ஆலயம் அமைத்தவர்?"

"ஆமாம், இந்த மந்திரியும் என் மூதாதை சின்னமனத்துளாரும் நெருங்கிய நண்பர்கள். மந்திரி அடிக்கடி இங்கு வருவார். மாவிட்டபுரக் கந்தனை வழிபட்டுவிட்டு சின்னமனத்துளார் வீட்டில விருந்துண்டு செல்வார் ஒரு நாள் விருந்துண்டு களித்த பின், அவ்விருந்தைப் புகழ்ந்து வெண்பா பாடினார்."

"யார்? மந்திரியா?"

"ஆமாம்"

"அப்பா, பாட்டுக் கூட உங்கள் மூதாதையர்கள் இடம் பிடித்திருக்கிறார்கள்."

"என்ன மகளே, கேலியா?"

இல்லை அப்பா, சொல்லுங்கள். அது என்ன வெண்பா?"

"சின்ன மனத்தான் செயும்
விருந்திற் சாற்றுருசி
அன்னதனை வண்ணோர்
அறிந்திருந்தால் - முன்னலை
வாய்
வெற்பதனைக் காலியுய்த்து
வேலைகடைந் தேயலைதல்
அற்ப மெனத் தள்ளுவரே
யாம்."

மீனலோசினி பெரிதாக நகைத்தாள்.

"பாற் கடலைக் கடைந்து பெறப்படும் அமிழ்தத்திலும் எங்கள் வீட்டு விருந்து இவ்வளவு ருசியா, அப்பா?"

வானம் தெளிவாகி, பளீரென வெயில் படர்ந்தது.

"வா, பசிக்கிறது. உன் அம்மா சமைத்து வைத்திருப்பது அமிழ்திலும் ருசியா எனப் பார்ப்போம்."

அவர்கள் எழுந்து வெளிமண்டபத்திற்கு வந்தபோது குதிரைகளின் குழம்பொலி வீதியில் எழுந்தது. சின்ன மனத்துளார் தயங்கி நிற்க, கோயிலின் வாசலில் கருங்குதிரையொன்று கம்பீரமாக முன்வந்து நின்றது. அதனைத் தொடர்ந்து நாலு பரவிகளில் வீரர்கள் அமர்ந்திருந்தனர். கருங்குதிரையில் அமர்ந்திருந்த வீரன் நிலத்தில் குதித்தான்.

சின்னமனத்துளாரின் விழிகளில் அச்சம் கலந்த வியப்புத்தோன்றியது.

"அம்மா இவர் தான் நம் மன்னர்... புவனேசபாகு..." என மெதுவாகச் சொன்னார்.

"இவரா?... நான் கிழவராக இருப்பார் என நினைத்தேன்... நான் போகிறேன், அப்பா..."

## அத்தியாயம் - 8

"நில், அம்மா. மன்னரைக் கண்டு வணக்கம் தெரிவிக்காமல் செல்வது ஏற்றதன்று"

சிறீசங்கபோதிபுவனேசபாகு என்ற செண்பகப்பெருமாள், பாதணிகளை வெளியே கழற்றி விட்டு, மார்பு உத்தரியத்தை இடுப்பில்பவ்வியமாகக் கட்டிக்கொண்டு வணக்கம் செலுத்திவிட்டு அவரை நோக்கி வந்தான்.

"வரவேண்டும் மன்னா... தாங்கள் இங்கு வருவீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை..."

புவனேசபாகு அவரைநோக்கிச் சிரித்தான். ஆஜானுபாகுவான அவன் உருவமும் கரிய நிறமும் மீனலோசினிக்கு அச்சத்தைத் தந்தன. அவள் தந்தையின் பின்னால் ஒதுங்கிக்கொண்டாள்.

"உம்மிடமே வந்தோம்: சின்னமனத்துளாரே, உம்மிடம் சிறிது பேசவேண்டும்."

"பாக்கியம்! வாருங்கள்... இவள் என் மகள்...."

"அப்படியா?... நலமாக இருப்பாய் பெண்ணே" என்றான் மன்னன்.

அவள் மன்னனுக்கு வணக்கஞ் செலுத்திவிட்டு விரைந்து சென்றாள். புவனேசபாகு உட்பிரகார மண்டபத்தில் ஒரு தூணுடன் அப்படியே அமர்ந்தான். அவன் முன் சின்ன மனத்துளார் அடக்க ஒடுக்கமாக நின்றிருந்தார்.

புவனேசபாகுவின் விழிகள் கோயில் உட்பிரகாரத்தையும் கர்ப்பக்கிருகத்தையும் சுற்றிப் பார்த்தன. விழிகள் பனித்தன.

"சின்னமனத்துளாரே, என் மனதில் அமைதியில்லை. என்று என் வீரர்கள் நல்லூரில் அமைந்திருந்த கந்தவேளின் கோயிலைத் தகர்த்து எறிந்தார்களோ அன்றிலிருந்து நான் நிம்மதியை இழந்துவிட்டேன். என் அரண்மனையின் பூசை மண்டபத்தில் இன்றும் கந்தனின் விக்கிரகம் இருக்கின்றது. ஊறுபட்ட அந்த விக்கிரகத்தின் விழிகள் என்னை வெறுப்புடன் பார்க்கின்றன சின்னமனத்துளாரே?"

சின்னமனத்துளார் நாழிகை எதுவும் பேசாது மன்னனைப் பார்த்தார்.

"ஆண்டவன் சித்தத்தை யார் அறிவார், மன்னா. அக்கோயில் அழிவுற்றதும் அவன் சித்தமாக இருக்கலாம். அதற்குப் பதிலாக உங்கள் மூலம்

[8-ம் பக்கம் பார்க்க]

சுத்தமான

# விளவு கற்பூரம்

சீனாவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனாவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப் பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்;
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்.


விநியோகஸ்தர்:

## பிரபா ட்ரேடிங் கம்பெனி,

31-31A, கபோஸ் லேன், கொழும்பு-11.

Phone: 29426

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னும் ஒரு திங்கள்

(குறுங்காவியம்)

புலவர் ம. பார்வதிநாதசிவம்

## [10]

''உடல்நலம் விரைவில் தேறிடும்'' என்றனள்
''எல்லாம் அறிவேன்'' என்றவன் கூறினன்
''குடிப்பதற் கெதுதான் வேண்டும்'' என்றனள்
''விருப்பம் போல நீதா'' என்றனன்
அவனது பேச்சில் அவனது பார்வையில்
திடீரெனத் தோன்றிய மாற்றம் தன்னைக்
கோதை கண்டனள் என்னவா யிருக்கும்
என்றே தனது சிந்தையைக் குழப்பினள்
அற்றைப் பொழுது கழிந்தது மறுநாள்
காலைப் பொழுதில் ராஜன் என்பவன்
''கோதாய் இப்படி அமர்வாய்'' என்றனன்
கட்டிலின் அயலின் இருந்த நாற்
கதிரையிற் கோதை யாம் காரிகை அமர்ந்தனள்
''என்மனத் துள்ளவை அனைத்தையும் இன்றே
சொல்லிட ஆசை ஒழுங்குற அவற்றினைச்
சொல்லிடு வேனோ என்பதில் ஐயம்
ஆதலால் என்தன் மனத்துள அனைத்தையும்
எழுத்தில் வடித்தனன் இதோபடி படிக்குமுன்
அதிர்ச்சி ஒன்றினைத் தாங்குதற் கான
ஆயத் தம்செய்'' என்றே கொடுத்தனன்
கோதையின் கைகள் நடுங்கின முகத்தில்
ஏதோ மாற்றம் திடீரென நிகழ்ந்தது;
கடிதம் தன்னைக் கையினில் வாங்கி
விரைந்தே படித்தாள் விழிகளோ கலங்கின.

''குணமென்னும் குன்றினிலே ஒளிசெய் கின்ற
குலவிளக்கே நறுமலரே உன்னை நானே
மணமென்ற பெயராலே அடிமை ஆக்கி
மன்னகத்தே பெரும்பாவம் புரிந்து விட்டேன்
கணமேனும் நிம்மதிநீ காணா வண்ணம்
கடுமையுடன் நடந்திட்டேன் என்தீங் கெல்லாம்
பணிமொழியே நீபொறுத்தாய் நான்செய் பாவம்
பயன்செய்யத் தொடங்கிற்றே அதைக்காண் கின்றேன்.''

''நின்னுடைய பேரழகே என்தன் சொந்தம்
நீபுரியும் இன்நகையும் எனக்கே சொந்தம்
நின்னுவாய் வரும்இனிய வார்த்தை யாவும்
நிலத்திடையே என்தனுக்கே என்றும் சொந்தம்
நின்னுடைய நேரமெலாம் எனக்கே சொந்தம்
எனநினைத்தேன் நின்அழகின் மயக்கத் தாலே
இன்னொருவர் நின்னுடனே பேசி னாலும்
என்னுடைய பொறுமையினை இழக்க லானேன்''

''ஐயமிதாய் இருந்திடலாம் அன்றி மற்றும்
அழுக்காறாய் இருந்திடலாம் எதுவா னாலும்
மைவிழியே நின்னழகின் போதை செய்த
மயக்கத்தால் என்றுநீ நம்பு வாயா
செய்ததெல்லாம் தவறென்ற ஞானம் தன்னைச்
செகத்திடையே இன்றைக்கே நான்பெற் றிட்டேன்
மெய்ந்நெறியே மிகமேவும் கோதாய் இன்று
மேவியதோர் ஞானத்தாற் பயனும் உண்டோ?''

ஓவியத்தின் பெருமையினை உணர்ந்த வேலை
ஒப்பற்ற விழிகளினை இழந்தல் போல
ஆவியினைக் கொள்கின்ற இசையத் தெய்தும்
அவ்வேளை செவிசெவிடாம் தன்மை போல
பாவிஇவன் நின்பெருமை உணரும் வேளை
பாரினில்வாழ் தகுதியினை இழக்க லானேன்.
நோவதினால் இனிப்பயன்என் என்னை நானே
குழப்பினேன் அதற்காக நோகின் றேனே.''

ஒப்பற்ற பெரும்செல்வ மாக நீஎன்
உயிர்த்துணையாய் வந்தெய்த அதைநோக் காதே
இப்புவியில் நிலையாத செல்வம் நாடி
இரவுபகல் அலைந்திட்டேன் நான்சேர்த் திட்ட
அப்பெரிய பணக்குவையோ இன்றே என்தன்
ஆத்மாவைத் தடுத்திடுமோ மார்க்கம் காணேன்
செப்பரிய குணம்படைத்த மனையாள் அன்றிச்
செகத்திடையே கணவனுக்கோர் செல்வம் உண்டோ?''

கண்களினால் நீர்பெருக்க கோதை என்பாள்
கணவனது கையதனைப் பற்றிக் கொண்டே
என்துணைவ நடந்தவெல்லாம் மறந்து போவோம்
இனிக்கடிதம் பின்படிப்போம் என்றே சொன்னாள்
அன்புடையோய் முற்றுமப் படித்த பின்தான்
அனைத்தையும் நீபுரிந்திடலாம் என்றான் ராஜன்
தன்துணைவன் பணித்தபடி கோதை தானும்
கடிதத்தைத் தொடர்ந்தேதான் படிக்க லானாள்.

உன்அழகை உன்தொழிலை உன்செல் வத்தை
உயர்ந்ததெனப் புரிந்திட்டேன் சிறிது தானும்
உன்னுளத்தைப் புரியாமல் இருந்தே விட்டேன்
உத்தமி நின்னுளத்தை யாதே சொல்வேன்
தன்துணைவற் கின்னலெனத் துடிக்கும் உள்ளம்
தர்மத்தைப் புரிவதிலே மகிழும் உள்ளம்
இன்னலினை எறும்புக்கும் எண்ணா உன்னம்
இத்தகைய உள்ளமே நின்றன் உளம்

(தொடரும்)

## கடலும் அலையும்—3

# வேண்டும் நட்பும்

# வேண்டா நட்பும்

வட்டூர்
எம். என்.
கடம்பேஸ்வரன்

இருக்க முடையது கல்: நெகிழ்ச்சியுடையது நீர்; நெகிழ்வுடையோர் கனிவையே யாவரும் விரும்புவர். கனிவுடைய நல்லவரால் நன்மையும் ஏனையோரால் தீமையும் நிகழுமாதலின் தீயாரென இனங்காணவிட்டால் தீங்கு விதிக்கும். இணங்கண்டு பழகுவதால் தீங்கு குறைவு. இந்த அவசர உலகில் நல்லவர் தீயவர் என்று ஆராய்ந்துகொள்ள அவகாசம் கிடைப்பதில்லை. ஒருவரது தன்மையை உணராமலேயே பழகவேண்டிய நிலை ஒவ்வொருவர் வாழ்விலும் ஏற்படுகின்றது. வெறும் பழக்கத்தை வைத்துக்கொண்டு உறவுகளை வளர்க்கக்கூடாது. உறவாக எண்ணிக் கூடிவிட்டால், பிரிந்துவிடுவது இலகுவன்று. எனவே, நீண்டகால ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும். ஆராய்ச்சிக்கு உள்ளாக்குதலின் அவசியத்தை வலியுறுத்தும் பாடல்கள் நீதிநூல்களில் அநேகம்.

ஒரு பாடலைமட்டும் பார்ப்போம்.

''மாரிஇல் பலரோடு பன்
னாள் முயங்கிப்
பொரிஇல் பொருட்டக்
கார் கோடலே வேண்டும்
பரீஇ உயிர் செருக்கும் பாம்
பொடும் இன்னா
மரீஇ பின்னைப் பிரிவு''

பலநாள் பலரொடுஞ் சேர்ந்து ஒத்துக் கலந்து பழகிப் பொருளாகத் தக்கவரையே உறவாகக் கொள்ளல் வேண்டும். எடுத்து உயிரை அழிக்கும் பாம்போடாயினும் கூடிப் பின்னர் பிரிதல் இன்னாமையாகும். ஆதலால் எவ்வாறேனும் தீயார் இணக்கம் தவிர்க்கப்படவேண்டியதே. தீயாரைக் 'காண்பதே' தீது என்றால் இணக்கம் எவ்வளவு தீங்கைத்தரும் என்பது சொல்ல வேண்டியதில்லை. இணக்கம் ஏற்படுமுன்னர் காண்டல் நிகழும் காட்சி இல்லையானால் ''இணக்கம்'' இல்லை. கண்டதும் இணக்கம் கொண்டதும் உறவு இது அறியாமையல்லவா!

இணக்கம்—பழக்கம்—உறவு என வளர்கின்றது காணுதலையே நீக்கிவிட வேண்டும்.

''தீயாரைக் காண்பதுவுந்
தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவுந்
தீதே — தீயார்
குணங்கள் உரைப்பதுவுந்
தீதே — அவரோ
டிணங்கி இருப்பதுவுந் தீது''

சிறுவர் சிலர் குளிக்கும் அறையில் குளிக்கிறார்கள். துஷ்டன் ஒருவன் நீகுமாய் செலுத்துவதற்காக விடப்பட்ட பொய் துவாரத்தில் தலையை வைத்துக் கூவிக்கேலி செய்கின்றான். இதனைக்கண்ட சிறுவர் பொருட்படுத்தாமலே அலட்சியம் செய்திருந்தால் தொந்தரவு இல்லாதிருக்கும். துவாரத்தில் தலையை வைத்தவன் துஷ்டன் எனத் தெரிந்தும்கூட சும்மா இருக்கவில்லை. ஆத்திரம் கொள்கின்றனர். தாம்பளை சிறுவரொருவன் தண்ணீரை வாரி இறைக்கின்றான். இதனால் துஷ்டனுக்கும் சிறுவருக்குமிடையில் சண்டை வளர்கிறது. பெரியோருக்கும் முறைப்பாடு செய்கிறது. சிறுவர் செயல்தானே எனப்பேசி வேடிக்கையாக விட்டுவிடுகின்றனர் பெற்றோர் கண்டிக்க முற்படவில்லை.

பாடம் புகட்டிவந்த ஆசிரியருக்கும் இது எட்டியது. ஆசிரியரோ பண்பை வளர்ப்பதில் அக்கறையுடையவர். அன்று காலையிலே தான் ''தீயாரைக் காண்பதுவுந் தீது'', எனப்பாடம் புகட்டியவர். ''நல்லிணக்க மல்லது அல்லற்படுத்தும்'' எனக்கூறி கண்டித்தார்; துஷ்டனுடன் உறவு இருந்திருக்கவில்லையெனில் சேட்டையுங் கேலியும் வளர்ந்தது எனக்கூறிப் புத்தி கூறினார். காலையிற்படித்ததின் உண்மையை மாலையிலே அறிந்து கொண்டீர்கள்; வருந்தவேண்டியதாயிற்று என்றார்முன்னர்ந்தவுடனேயே முட்செடியை அகற்றுவதுபோன்று ஆரம்பகாலத்திலேயே தீயார் சேர்க்கையை நீக்கவேண்டும். இவ்வாறு சந்தர்ப்பம்நோக்கி நீதிநூற் கருத்துக்களை மாணவர் மனதில் நிறுத்திவிட்டால் முதற்கட்டுரையிற் குறிப்பிட்டதுபோல் பண்பாட்டை இலகுவாக நிறுத்தலாம்.

காணுதல் நிகழ்ந்த பொழுதே நீக்குதலால் இணக்கம் — பழக்கம் — உறவு அனைத்தும் தவிர்க்கப்பட்டது. உலகின் வேகத்திற்கேற்ப நாமும் வேகமாகப் போக வேண்டியுள்ளதால் நல்லோர் இவரென தீயவர் இவரென ஆராய்ந்து செயற்பட முடியாத இடங்களும் உண்டு. தீயார் இவரென அறியாது உருவத்தால் நல்லவர்போன்ற தீயவரைக் காணுதலும் நிகழும். இச் சந்தர்ப்பங்களிலே கெட்டோர் சேர்க்கையைத் தடுக்க முடியாவிட்டாலும் உறவு வளர்ச்சியை ஏற்படுத்தும் இணக்கத்தை நீக்கியே விட வேண்டும். தீயவர்கள் தங்களது தீக்கருமங்களுக்கு உதவியாக்குதற் பொருட்டுத் தீய உறவுகளை வளர்க்கவே செய்வர். நல்லோர் இதனைக் கண்டஞ்சுவர், நல்லோராக விரும்புபவர் இதனைக் கண்டஞ்சி ஒதுங்கவேண்டும்.

''சிற்றினம் அஞ்சும்
பெருமை சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்''

(8-ம் பக்கம் பார்க்க)

லீடா
முழு ஆடை நிறைந்த பால்
★ உடனே கறந்த
பசுப்பாலின் ருசி!
★ பால் வெண்ணெய்
கூடுதலாக உள்ளது!
★ இணையற்ற
சக்திமிக்க பால்!
● உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட
- ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கின்றது.
● பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை,
கைபடாதது, அசலானது என உத்தரவாத
மளிக்கப்படுகின்றது.
● டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே
கிடைக்கின்றன




விற்பனையாளர்
மில்லர்ஸ்
லிமிடெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகஸ்தியரின்
உணர்வூற்று உருவகச் சித்திரம்

# உன்னால் உன்னுள் அழியும் நீ

நீ...

உலகச் சொத்தை வாரி உனதாக்கவெகிக்கிட்ட சரண்டற்பூதம்.

நீ, உன்னை ஒருவனாயுணர்ந்த உனிற்து உன்னிச்சையே உலக நியதியெனச் சாற்றத் தன்னுறிக்க வர்க்க சேவகனுகிறாய்.

ஆக, நீ, உன்னுள் திடுமி, 'நான்' என அகங்காரித்து உன்னை, நீ'யாகவே 'பலவான்' எனப் பாவனை புரிய முனைவதால், உன் வீர விரல் இறந்த நாறற் சடலம் என்றுகிறது.

உன்னுணவத்திலும் உன்னுவாத நீ, உன்னுள் வெறித்து ஜனித்த அவாவால் உன்னிற் திமிறி, உலகச் சொத்தை வாரியாள ஆவேசித்து உன்னில் வெருண்டு இரு உலகமாயுத்தங்களை மூட்டி லோகமாதா இதயத்தில் ரத்தச் சுவடு பதித்து மனுக்குலத்தைப் பிணவெடிலடிக்கவாக்கிறாய்.

உன்நேச வாரிசுகளான நாஜிஸ நரவேட்டையரின் பாஸிச நிஷ்டூரத்தை மறைக்க நீ தேர்ந்த 'மதங்கள்' என்ற ஆயுதங்களை எடுத்து அவற்றால் மனுக்குலத்தை 'வெறும் மடையர்களாக்கி' விடலாமெனு முன் கணிப்பில் கணிசமான ஆதாயம் பெற்றுவென்பதற்கு நீ அதன் போர்வையில் கட்டி எழுப்பிய மாடமாளிகையுடைத்தான மாளிகைகள் கோட்டை கோபுரங்கள் ஆயுதப்பாசறைகளே சாலிறு.

இதன்கண் நீ உலக ஜீவிகளை 'அபினுண்ணி'களாக்க இவ்வுலகைய 'மாயப்பிரபஞ்சம்' எனக் கற்பித்து பஜனைசெய்த பூஜிதிகளாக - வேஷதாரிகளாக - வீணர்களாக - விறுத்தாப்பியர்களாக - விவாரிகளாக - போலிகளாக காமமோகிகளாக ஆக்கிவிட்ட நீ இதே உலகை உன் சுகபோகம் சொர்க்கபூமியாக்கியான இப் பஜனைப் பூஜாரிகளிடமே பாசாங்காக மந்திரிக்கின்றனை...!

கள்ளப்பூனைகள் ருத்திராக்ஷமாலைவாதிகளாயின, சாத்தான்களே வேதம் ஓதுவதாயிற்று.

அறிவிலிகளைப் பாவிகளாக்கி அப்பாவிகளை அஞ்ஞான வாதிகளாக்கியதில் நீ மகா சூரனே.

ஆனால் உன் சூரத்தனம், மனுக்குல ரக்ஷகர்களான விஞ்ஞான சோஷலிஸ மெஞ்ஞான வாதிகளால் 'பித்தலாட்டப் பேய்த்தனம்' என மெய்ப்பித்ததைக்கண்ட நீ மதங்களை உன் ஆதாயப் பிரசாரப் படைகளாக்கி உன்னுள் அவையும் அவை உன்னுளுமாக இறுகப் பிணைத்த சங்கிலியாக்கிக் கொண்டு 'சுதந்திர ஜனநாயகம்' என்னும் ஜெபமாலையை ஓதுகிறவனாயினாய்.

மதம் பிடித்த மதவெறியனான நீ மதங்களையே உன் கவசங்களாக்கி, நீயே பதவிரோத மக்கள் விரோத அக்கிரமங்களைப் புரிந்துகொண்டு, அவற்றையே பொதுமைவாத மானிடத்தவர் தலையில் கட்டி ஜால வித்தை காட்டலாகிறாய்.

ஆயினும் என்ன?

'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்' என்ற திருவாக்கிற்கு உன் வேஷங்களிற்று உன்னுள் நீயே அழியலாகிறாய்.

உலகார்த்த உன்கோசப்பிசங்கள் 'சடசட' வென நிர்மூலமான தால் உன்னுள் உனக்கெழுந்த வெப்பிசாரத்தின் கண் நீ சித்த மிழந்த பித்தனாகி மனுக்குலத்தையே ஒருசேர அழித்துவிட யுத்தசைனியங்களை உசுப்பி விடுகின்றாய்.

நரமாமிசப் பசிவெறியனான நீ பசுவாக வேஷித்து உன் தனி மனித சுகபோக ஆதிக்கப் பிடியின் கண் உலகாதிகள் உழைப்பை உன் சுரண்டற் கடிவாளத்திற் பூட்டிவிட்டு தர்மபோதவாதி' போல் 'ஜனநாயக' மந்திரத்தை உச்சாடனம் பண்ணும்போதே உன் வேஷத்தில் 'பாஸிஸம்' பளிச்சிடுகின்றது.

முதலாளித்துவதாஸனான நீ, மதங்களையும் உன் சேவகனாக்கி மனிதகுல கலாசாரத்தையே கொலைக்களத்துக்கு இட்டுச் செல்கின்றாய்.

'யுத்த மூஸ்தீப்பில் சமாதானம் செப்புதல்' உன்வர்க்கத் தந்திரம்' என, உணர்வினூடாகத் தெவித்த தொழிலாளவர்க்கத்தை, ரத்தவெறியனான நீ, உன் நாஜிப்படை கொண்டு நீசத்தனமாக நரவேட்டையாடினாய்.

தனியுடைமையாதிக்கவானாகிய நீ, உன் கோபுரவாச வர்க்கவரன்களுக்கென உல்லாசபுரி தேடுங்கால், உலகையே உன் ஏகபோகமாகத் தன்னுதிக்கத் திமிரனாகி மனுக்குலத்தையே அச்சுறுத்தினாய்.

உன்னால் அடிமைப்பட்ட, சுரண்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட, கொடுமைப்பட்ட, தாழ்த்தப்பட்ட பாட்டாளி வர்க்க மக்கள் உழைப்பே நீ கட்டிய கோபுரங்கள் என்பதை அவர்கள் உணராதவரை உனக்கு வாகியே.

ஆனால்...... ?

பாட்டாள - தொழிலாள - விவசாய வர்க்கம் போதம் பெறுவதால் உன்கோபுரக் கொடுமுடிகள் நொறுங்குண்டு கிதறி நிறுதுவளாகின்றன.

தம்மைக் 'கொடிய வறுமை பீடித்துள்ளது' என்ற உண்மையை அவர்கள் உணர்கின்ற போதும், தாங்களே செதுக்கிய சிலைகளை அர்ச்சித்து வானத்தை நோக்கி விடிவு காண விழைவதில் அவர்கள் 'பொய்'யர்களாகித் தங்களைத் தாங்களே வஞ்சித்து அழிகின்றார்கள்' என்பதில் நீ வெகுகுஷி கொள்கினும், பொதுமை வாதிகளால் 'போதமாவார்' என்ற அங்கலாய்ப்பு உன்னை வலுவாக நெக்குருக்குகின்றது.

நீபூட்டிய அடிமைவிலங்கைப் பொடியாக நொறுக்கி எறிய, மனுக்குல ரக்ஷகரான பொதுவுடைமை அணி விறல் கொண்டு உன்னை எதிர்கொள்ள, நீ, அவ்விரக்ஷகரையே 'ராக்ஷஸர்க' ளுவமித்து உலகைப் பயங்காட்டி, விடுதலை வேட்கையர் மீது உன் ஆதிக்க அதிரடிப்படைகளை உசுப்பிய போது, தியாகிகளான 'சமரவீர யானர்கள்' என்ப்படுகின்ற நீ, உன்னுள் இறுமாந்து கொண்டே, 'சத்வகுணபோத ஞானி'யாக வேஷிக்கலாகிறாய்.

ஆதியோடந்தமாய், அநாதிகாலமாக, அகிலத்தை அடக்கியாண்ட உன் ஏக சக்ராதிபத்தியக் கோப்பிசம், 'ஆகா' வென்றார்த் தெழுந்துவெடித்த ஒக்டோபர் புரட்சியில் சுமல குணடணமாக நொறுங்கி இருவேறு துருவ சமுதாய முனைகளானபோது, உன்வீர, சாரு காவுபதுநீர எவ்வாயிற்று?

உன்னால் அடக்கி ஒடுக்கிய ஜனக்குழாம் குமுறும் அலைகளாக எகிறி அம்மாறுபோட, நீ, உன்பற்களை நரிடி நறநி, உன்னில் இறுமாந்து உருவேற்றிய உன் வெருட்டலுக்கு இறுங்கா தெனக்காண, உன் கிரீடம் உன் கமண்டலத்தினின்றும் கவிழ்கின்றது.

விடுதலை விறலர்களின் சமரக் உன்செவிகளிற் சவப்பறையாக விழ, உன் விழிகள் மிரண்டு முழிபேர்த்து நெகிழ்கின்றது.

விறடைந்த விடுதலைப் போராளர் வீரமிகு ஆக்ரோஷிகளாகப் பரிணமித்து இதோ உன்னை அணிமித்து உத்வேகிக்கின்றார்கள்.

உன் தனியுடைமையாதிக்க விஸ்திரணத்திற்கென நீயே ஆயுதபாணியாகி, நிராயுதரை அடிமையாக்க நீ ஏவியபாணம் மனுக்குலத்தின் சமாதான சகவாழ்வுக் கோஷங்களாக உன்னையே அழிக்கும் என நீ அஞ்சுவதால், நீ, உன் 'ஜனநாயக சுதந்திரக்கானல் நீரை'ரையபடியும் காட்டி உலகாதிகளைத் தவிக்கவைத்துக் கொண்டே, நவீன விஷ அணுவாயுதத் தளங்களைக் கேந்திரமாக்கி, பழிவழைய மறுகன்னியிக் சாட்டி; உன்னிக் திடும்பனுகின்றதை இனம் கண்ட உழைப்போர் சக்தி ஆவேசித்து எதிர்கொண்டு ஆக்ரோஷமாக ஆர்ப்பரிக்கின்றது.

மனுக்குலமே உன் நீசத்தனங்கண்டு வெம்பி, 'மக்கள் சக்தி'யாக உருவெடுத்து இதோ உன் ஏகபோக முதலாளித்துவ சாம்ராஜ்யத்தை எரிசரமென எச்சரிக்கின்றது.

''பாஸிஸ வெறியனே மூன்றாம் உலகப்போரைத் தூண்டாதே''

''சமாதானமே உலக கீதமாகும்''

''நாஜிஸ நரவெறியனே யுத்த நினைவில் மூழ்காதே''

''மக்கள் விரோதியே, உன்னால் வறுமையைப் போக்கி, மனுக் குலத்தை ரக்ஷிக்க முடியாது.''

''முதலாளித்துவமே.நீ உருவாக்கிய யுத்த முனைகள் உன்னையேஅழிக்கும்ஜாக்கிரதை,''

''உன்னால் உன்னையும், எம்மால் நீயும் அழியுமுதை விடுத்து உலகோரை உய்விக்கும் ஆக்கவனவாயாக.''

''சமாதான சக வாழ்வே, எங்கும் வியாபிப்பாயாக.''

''உலக மக்களே, மனுக்குலத்தை ரக்ஷிக்க ஒன்றுசேர்வீர்.''

''யுத்த மேகமே, கலைந்தழிந்தொழிவாயாக.''

அகிலமட்டும் கடலிடருசற் குமுறி பெழும் கலியுக ஒலி, 'சமாதானப் பிரகடன' மாய் உலகளாவுவதைக் கண்ட நீ, உன் ஆயுத விற்பனைச் சந்தை விழுக்காடாகுமெனத் திகில் கொண்டு செவி மண்டிப் போய், கலியுகத்தினைப் பார்க்கிறாய்.

ஒரு கால உலகை ஆதிக்கம் புரிந்து ஆணவங் கொண்டநீ, இன்று ஆற்றும் சக்திமிழந்தே தவிக்கின்றனை

அதோ, உன் வீழ்ச்சிக்கான 'இருதயும்' எழுகின்றது.

இதோ, 'சமதர்ம சமாஜ நீதி, ஜெக மடங்க ஜோதி' யென ஜொலித்துப் பிரகடனமாகின்றது.

''தனியுடைமை தகர்த்துப் பொதுவுடமை சமைப்போம்''

இப் பிரகடனம் கோடையிடியாக உன் நெஞ்சில் அதிர்கின்றது.

'நான்' என அகங்காரித்த நீ, உன்னுள் அழியும் கோலத்தைக் இதோ நேரிற் காண்கின்றாய்.

''உலகில் ஏக சக்ராதிபத்தியம் புரிந்த என்னை, வீழ்த்துகின்றது யார்?''

மரணப் படுக்கையிலும் மமதையோடு கர்ஜிக்கின்றாய்.

''நாம்,சமாதான சக்திகள்''

''சமாதான சக்திகளென்றால்......?''

''தொழிலாளர்கள்!''

[யாவும் கற்பனை]

---

## அன்னை உள்ளம்

வெண்ணிலா வருகைகண்டே
விரிந்திடும் குமுதம் எல்லாம்
விண்ணிவோர் கதிரைக்
கண்டே
விரிந்திடும் கமலம் எல்லாம்
மண்ணிவோர் மழையைக்
கண்டே
மகிழ்ந்திடும் பயிர்கள் எல்லாம்
கண்ணிலோர் துளிகைக்
கண்டே
கலங்கிடும் அன்னை உள்ளம்

காதலர் வரவு கண்டே
களித்திடும் கன்னி உள்ளம்
போதலர் பொழுதுகண்டே
பொருந்திடும் வண்டின்
கூட்டம்
நோதலர் நிலைமை கண்டே
நுவழந்திடும் துன்பின் ஈட்டம்
காதலர் குயிலைக் கண்டே
குழைந்திடும் குதலை உள்ளம்

முருகவே. பரமநாதன்

---

முன்னாள் சிறைச்சாலைத்தீவின்

# பழங்குடி மக்கள்

வி. என். எஸ். உதயச்சந்திரன்

பழங்குடி மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் ஒருவகையான எளிமை நிறைந்திருப்பக் காணலாம். மனித சமுதாயத்தின் போலி நாகரிகத்தால் பாதிக்கப்படாத எளிய மக்களே அந்தமான் பழங்குடியினர்:

சில ஆண்டுகளுக்குமுன் அந்தமான் என்றதும் ஒரு பயங்கர நரகமென்றே எண்ணியிருப்பர். இந்திய மக்கள் இப்பொழுதும் அந்தமான் பெயரைச் செவிமடுத்தபோதே கிடுகிடுத்துப் போய் விடுகின்றனர். இந்தியர்களுக்கு அந்தமான் என்றால் 'தீவாந்தர இட்சை' என்ற பொருள் மட்டும் தெரிந்தகாலமது தீவு முழுவதும் சிறைச்சாலையாக வெள்ளையர்களால் கட்டப்பட்டிருந்தது:

### இயற்கை எழில்

கண்கொள்ளா எழில் குலுங்கும் பூஞ்சோலைகள் அந்தமானுடைய எழிலுக்கு எடுத்துக்காட்டாகும். அந்தமான் என்றசொல் அழகிய மான் என்ற பொருள்படும். எழில்மிகுந்த மான்கள் அங்கு இருக்கின்றன. மேலும் அனுமான் தென்திசை நோக்கிச் சென்று இத்தீவில் இறங்கினான் என்ற காரணத்தால் அனுமான் என்றசொல் பின்னாளில் மருவி வழங்கலாற்று என்பர் வடமொழி வல்லுநர்கள். எவ்வாறாயினும் அந்தமான் இன்று மக்கள் விரும்பிச்சென்று குடியேறித் தொழில்புரிந்து வளமும் வாழ்வும் பெறக்கூடியதுமான பூலோக சுவர்க்கம்எனக் கூறுவது மிகையாகாது.

அந்தமான் நிக்கோபார் [illegible] பிப்ரவரி வரை குளிர்காலம். மார்ச்சிலிருந்து மே வரை கோடைகாலம். மே மாத இறுதியில் பருவமழை தொடங்கி நவம்பர்வரை பெய்யும். ஆண்டுக்குச் சுமார் 120 அங்குல மழை பெய்கின்றது.

மலைகள் சூழ்ந்த அந்தமான் அடர்ந்த கானகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக் கானகங்கள் அந்தமானின் அளப்பரும் செல்வங்களாகும். கானகங்களில் உள்ள மரங்கள் சிறப்பானவை. இந்தியாவில்கூட இத்தகைய மரங்கள் இல்லை.

படாக், அந்தமான் செம்மரம். பப்பிடாருர்ஜானி முதலியன சிறப்பு வாய்ந்தவை. இங்கு தேக்குமரங்கள் இல்லை.

கானகங்களில் காட்டுமிருகங்களே இல்லை, அந்தமான் என்ற பெயருக்கேற்ப ஏராளமான மான்கள் இருக்கின்றன. அங்கு பன்றிகள், பாம்புகள் அட்டை போன்றன ஏராளமாக உள்ளன. பசு, யானை, எருமை முதலியன இப்போதுதான் அங்கு காணப்படுகின்றன.

### வாழ்க்கை முறை

அந்தமான் தீவுகளில் பழங்குடி மக்கள் எக்காரணத்தாலோ குறைந்துகொண்டே வருகின்றனர், இவர்கள் அலைவரும் நாடோடி வாழ்க்கை நடத்திவந்த ஒருவகை நீக்ரோ இனத்தவர்கள்.

ஆண்கள் பன்றிபோன்ற மிருகங்களை வேட்டையாடுவர். பெண்களும் இறுவர்களும் குச்சிகளைக் கொண்டு வேர்க்கிழங்குகளைத் தோண்டி எடுப்பார்கள். கடற்கரை ஓரங்களில் ஆமை, மீன் முதலியன வற்றைப் பிடிப்பர். பயிர்த்தொழில்பற்றி இவர்களுக்குத் தெரியாது இத்தகையோர் ''உணவுப்பொருள் திரட்டுவோர்'' [Food Gatherers] எனப்படுவர்.

இவர்கள் தாங்கள் வாழ்ந்து வந்த பிரதேசத்தை மிக அக்கறையாகப் பாதுகாத்து வந்தனர். அந்நியர் எவரையும் தங்கள் பிரதேசத்திற்குள் நுழையவிடுவதில்லை. அந்நியர் படகு ஏதேனும் கண்டால் வில்லு, அம்புடன் போருக்குத் தயாராகி விடுவர். ஆகவே எவரும் அவர்கள் வாழும் இடங்களுக்குச்செல்ல அஞ்சுவர்.

விழாக்காலங்களில் இரவு முழுவதும் நடனமாடுவர்

ஊங்கியர்

இங்கு ஊங்கி என்ற ஒரு கூட்டத்தினர் உள்ளனர். இவர்களும் சுருட்டைத் தலைமுடிகொண்ட நீக்ரோ இனத்தவராவர். ஊங்கிப்பெண்கள் ஒருவகைக்குஞ்சத்தையும் ஆண்கள் லங்கோடு போன்ற மர உரிவையும் இடையிலே அணிகின்றார்கள்

தீவு முழுவதிலும் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ள வட்ட வடிவமான குடிசைகளில் வாழ்ந்துவருகின்றனர். தங்களால் வேட்டையாடப்பட்ட பன்றிகளின் மண்டை ஓடுகள் தாடைபெலும்புகள், ஆமையின் ஓடுகள் இவைகளை வெற்றிச்சின்னங்களாக இவர்கள் குடிசைகளில் தொங்கவிட்டு வைப்பர். இச்சின்னங்கள் மீது ஒருவிதச் சிவப்பு வர்ணம் தீட்டி வைப்பர் வேட்டைக்குச்செல்லுமுன் இதைக் கண்ணுற்றுச் சென்றால் நல்ல சகுனம் என நம்புகின்றனர்.

இசை நடனம் எனின் ஊங்கிகளுக்கு மிக விருப்பம்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலும் அலையும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறியோரை ஏன் நீக்கவேண்டும் தீயவர்கள் எப்பொழுதும் தீயவர்களைச் சார்ந்து இருப்பதால் தீயவர் கூட்டம் பெருகிக் கொண்டேயிருக்கின்றது. இத்தகைய கூட்டத்தில் இருக்கும் ஒருவன் மேலும் கெடவும் கெடுக்கவும் வாய்ப்புண்டே தவிர திருந்தவோ நன்மைசெய்யவோ வாய்ப்பில்லை. கெட்டோர் கூட்டம் பெருகுவதால். கெட்டதையே பேசி ஆராய்ந்து உலகமே கெட்டதுதான் என்ற உணர்வு மேலோங்கிவிடுகிறது. கெட்டதைச் செய்தாற்றான் வாழ்வுண்டு என்றுமனம் பேதலித்து விடுகிறது. அதன் வசப்பட்டு உழல நேருகிறது.

பெரியோர் கூறுவனவற்றை ஆராயலாமா? அன்புள்ள பெரியோர் கூற்று எமக்குப் பிழையாகத் தெரிகின்றதென்றால் அது எமது விளக்கக்குறைவாக ஏன் இருக்கக் கூடாது? அநுபவக்குறைவால் பிழைபட உணரநேர்ந்தாலும் அவர் கூறுகிறார். ஆதலால் செய்வோம் என எண்ணி ஏன் செய்யக்கூடாது.

## வள்ளுவனூர் பாடும் நம்நாடு

போட்டியின்றி நாங்கள் தொடர்வோம் பெரியையா
வாட்டுக்கும் பின்பு பழுதில்லை நல்லமழை
ஆட்டுவதேன் தங்கள் தலை.

"ஆடுகிற தென்மெய் அருந்தென்று தந்தீரே
வாடி மதுவோ அது?"

மதுநீர் என்றீர்கள்; மதுவென்றால் என்ன?
குதிபோடும் உங்கள் தமிழ்.

"வெண்பாப் புகழேந்தி விதியினைப் பார் உங்கள்
பண்பாட்டைப் பார்தம்பி பார்!
செங்கோலைக் கொண்டோர் கொடுங்கோல் நடக்கிறதே
எங்கே உம் கட்டுப்பாடும்?"

சட்டம் ஒழுங்கு சனங்கள் பொறுப்பிலையா
தட்டுப்பா டிங்கத் தமிழ்!

"பொன்னைக் கொடுக்காதே போசம் நடக்கிறதே
என்ன மனிதர் இவர்?
கள்ளாமை பற்றிக் கனக்க எழுதிவைத்தேன்
தள்ளியதேன் வள்ளுவனை ஈங்கு?
நென்னல் நான் பத்திரிகை பார்த்தேன் நெடியானே
பொன்னைப் பறிகொடுத்தான் என்று
நெடியானின் வீட்டுக்கே காப்பில்லை என்றால்
குடியான வர்க்கேது காப்பு?
ஆவுக்கு நீரென்றிரப்பினும் நாவுக்கும்
ஈனமடா என்றே எழுதிவைத்தேன் தம்பி, இங்கே
மானமிருக்கும் இலட்சணத்தைப் பார்த்தாயா?
வானமிருக்கும் மழைஇங்கே பெய்திடுமா?"

அப்படிச் சொல்லாதீர் அறமுணர்ந்த வள்ளுவரே
தப்பெனது மேற்றான். தவறுகத் தந்துவிட்டார்
அப்பிலும் கொஞ்சம் முகத்தைக் கழுவுங்கள்
மப்பெல்லாம் இந்நிலையை இங்கு:
தானமிருக்கும் தமிழிருக்கும் நாடிதையா.
மானமிருக்கும் மலையளவாய் இன்றைக்கும்
சனமிருக்கும் இரண்டொருவர் உள்ளனர் தான்;
குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றில்
மிகைநாடி மிக்க கொளல் என்றெழுதி வைத்த
வள்ளுவரே இங்கு வழக்கள் இருந்தாலும்
கொள்ளத் தகைய குணம்படைத்தோர் தானிங்கே
கூடவையா, பின் ஏன் குறை?

மப்புண்டதாலே என் வாய்த் தமிழ்கொஞ்சம்
"கைப்புண்ட தின்னும் கடுக்கிறதா தம்பி அது?
அப்புண்டதாலே சரி அதுதான் சொன்னேனே
துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

தள்ளா விளையுள் தக்கார் இவற்றைப்பார்த்துவிட்டோம்
செல்வரிடம் செல்வோம் இனி"

நில்லுங்கள் வள்ளுவரே! நேரந்தான் வீணாகும்
செல்வர் வெளிநாடு செல்வர் இருக்கிறவர்
இல்லை என்று சொல்லும் என்று இளையிடம் சொல்வர்

"நல்ல நகைப்பிவர்கள் எல்லோரும் லோபிகளா?
ஈதல் இசைபட வாழ்தல் அதுவன்றி
ஊதியமில்லை யுயிர்க்கு"

ஊதியமில்லை உழைப்பில்லை என்று சொல்வர்.
ஏதேதோ இல்லை என்று தம்முடைய பத்தினிமார்
காதோடு சொல்வர். கடுகதியிலே செல்வர்;
மீதிப்பேர் முன்னை நாட் செல்வர் நாம் என்று சொல்வர்

"ஈதோ உம் நாட்டினியல்பு?
ஐயா நில்லுங்கள்"
செல்வர் ஓர் நாட்டுக்குச் செல்வம் அவரின்றேல்
நல்லதொழில் ஆக்க நலிவு

"குன்றாத செல்வம் குவிக்கும் தொழிலகங்கள்
இன்றேல் இதுவென்ன நாடு?"
ஐயா வள்ளுவரே,
உம்கண்ணுற் கண்ட இந்தத் தமிழ்மண் இருக்கிறதே
எம் கையில் இல்லாத நாடிது தான் நம்புங்கள்
வேண்டும்ஒரு நாடொன்று வேண்டி நிற்கும்எம்மினத்தைப்
பூண்டோடழிக்கப் படம் போட்ட 'ஆண்டவனர்'
"வேண்டாம் எமக்கோர் தமிழ்நாடு" என்றெம் மக்கள்
சொல்லட்டும் என்றிங்கே செய்து வரும் சூட்சியங்கள்
ஆட்சியளவு, அது இது என்றெல்லாமே
போட்டுக் குழப்பி விட்ட நாட்டைத் தான் பார்த்தீர்கள்
நமை நாம் நிற்கு மந்த நாடு, திருக்குறளிற்
பாடி வைத்த நாட்டைப்போற் பண்புயரும் பாருங்கள்

"நாக்குளிக்கச் சொல்லுகிறாய் நல்ல தமிழ் வாணா
சீக்கிரமே அந்தச் சிறப்பு மலரட்டும்
வாக்கிலிக்கச் சொல்லுகிறேன் வாழ்த்து"

— "வெண்பாவிற் புகழேந்தி"

நெல்லன்-நேற்று: அப்பு-தண்ணீர்

(முற்றும்)

## பழங்குடி மக்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் உடல் மீது ஒருவிதக் களிப்பு வர்ணத்தைத் தீட்டிக் கொள்கின்றனர். பேய் பிசாசுகளில் ஊமிகளுக்கு நம்பிக்கை உண்டு. இவர்கள் அந்தமானில் எல்லாருடனும் தொடர்பு கொண்டு பழகுகின்றனர்.

ஜாரவர்கள்

தெற்கு மத்திய அந்தமானின் மேற்குக்கரைகளில ஜாரவர்கள் வசிக்கின்றனர். இவர்கள் பகையுணர்ச்சி மிக்கவர்கள். இவர்களுடன் அரசாங்கம் தொடர்பு கொள்ளப் பல முறைகளில் கவனம் செலுத்தி வருகின்றது. ஆயினும் பயனில்லை. நாளடைவில் ஜாரவர்களும் ஒரு வேளை பிறருடன் தொடர்புகொண்டு நெருங்கிப்பழகலாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

## கந்தவேள்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கந்தவேள் எதை எதிர்பார்க்கிறாரோ? முன்னதிலும் பார்க்கப் பெரிதாக... அருள் விளக்கம் நிறைந்த ஆலயத்தை..."

புவனேசபாகுவின் விழிகள் மலர்ச்சியால் விரிந்தன. அவசரமாகக் குறுக்கிட்டான்;

"நான் எதைப் பரிகாரமாக நினைத்தேனோ, அதையே நீர் சொன்னீர். ஆம், நான் கந்தவேளுக்குப் பெரியதொரு ஆலயம் சமைக்கப்போகின்றேன். அதுதான் நான்செய்த தீவினைக்குக் கழுவாய் கின்னமனத்துனரே, நீர் எனக்குச் சில காரியங்கள் செய்து தரவேண்டும்...."

"கட்டளையிடுங்கள்..."

"திருச்செந்தூருக்கு உடன் நீங்கள் செல்லவேண்டும். அங்குள்ள பிராமணோத்தமர்களுடன் கலந்துபேசி, சிவாகமங்களுக்கும் குமாரதந்திரவிதிகளுக்கும் அமைந்ததாக கந்தவேள் ஆலயவடிவத்தைச் செப்புத்தகடுகளில் வரைந்து வரவேண்டும். அத்துடன் அந்த ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்வதற்கான மூலவிக்கிரகங்களையும் பரிவாரவிக்கிரகங்களையும் சிற்பசாஸ்திர விற்பன்னர்களிடமிருந்து சிலாவிக்கிரகங்களாகக் கொண்டுவரவேண்டும்..."—மன்னன் சொல்லிக்கொண்டு போனான்.

கின்னமனத்துளார் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

(வளரும்)

## புதிய புத்தகம்

நூல்: பருத்தி சித்திரத் தேரினிலே

ஆசிரியர்; சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை B. A;
(பருளாய் விநாயகன்)

பதிப்பாசிரியர்: திரு சி. பிறைசூடிக்குரு ஆசிரியர்

சுழிபுரம் பருளாயம் பதியில் எழுந்தருளியிருக்கின்ற விநாசுப்பெருமான் முருகப் பெருமான் இருவரும் ஆரோகணித்தருளப் புதிதாயமைக்கப்பட்ட சித்திரத்தேரினிலே பருளாய் விநாயகப் பெருமான் எழுந்தருள் புரிவதையிட்டு வெளியிடப்பட்டதே இந்நூலாகும். இந்த நூலில் உள்ள பாமலர்கள் ஒவ்வொன்றும் பக்திமணம் பரப்புகின்றன; வரலாறு விநாயகர் பெருமை என்பனவே இப்பாமலரின் அமைப்பாக விளங்குகின்றது: இவற்றுள் ஐந்த நூல் விநாய பக்தர்களின் பிரார்த்தனைக்கு உகந்ததாக உள்ளது; பருளாய் விநாசர் கோவிலைப் பறங்கியர் இடித்தபோது பிள்ளையார் காகமாக வந்து கொத்திக் கலைத்தார் என்ற இக் கோவில் வரலாற்றை 'பரராசன் நாடிய நற்கோவில் தன்னைப் பறங்கியர் தாம் வந்திடித்த போழ்து ஐய! சரவணது காகமாய்க் காத்தாய் அன்று' என்று நினைவு கூரும் பகுதியினைப் போல் கோவில் வரலாற்றை நினைவு கூரும்பகுதிகள் ஆங்காங்கு விளங்கின்றன.

'தக்கதருணமையா - தமிழ் மக்களைக் காத்திடத்தக்கதருணமையா' 'திருமுறை தந்தவரே வாரும். தீந்தமிழர் உய்ய வழி தாரும்' என்பன போல உள்ள தொடர்கள் இக்காலத் தமிழ்மக்கள் அனைவரும் பிரார்த்திக்கத்தக்கனவாக விளங்குகின்றன.

'சித்திரத் தேர் தந்தவர்கள் வாழ்க வாழ்கத் சிறந்ததவத் தொண்டர்கள் வாழ்க வாழ்க, முத்தமிழை உணர்ந்தோர்கள் வாழ்க வாழ்க எனத் தொடங்கும் வாழ்த்துப்பாடல் நூலாசிரியன் மரபுக்கல்வி, புராணப் பயிற்சி, காலத்தோடொட்ட ஒழுகும் பண்பு என்பனவற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன;

தி. பொன்னம்பலவாண

★

ஆரம்ப விஞ்ஞானம்

ஆண்டு: 4

எம். கி. பிரான்சிஸ் என்.

யே. சக ஞானப்பொன்ராஜ்

விலை: 13 ரூபா

பக்கங்கள்: 68

இன்றைய உலகில் விஞ்ஞானம் மக்களோடு இணைந்து விட்டது. குழந்தைகள் கூடகம்பியூட்டர் விளையாட்டுக்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இளம் சிறார்களுக்கு விஞ்ஞான நூல் எழுதுவது சுலபமன்று. ஆசிரியர் ஆசிரியருக்கான குறிப்பில் கூறியிருப்பது போல் கண்ணால் காண்பதும் தொட்டுணர்தலும் செய்து பார்த்தலுமே விஞ்ஞானத்தைக் கற்கும் சிறந்த வழியாகும். பழுத்த அனுபவமுள்ள ஆசிரியர் சிறார்களுக்காக இந்நூலை எழுதியதுசிலாக்கியமே. ஆரம்பபிரிவு ஆசிரியரை இணைத்து இந்நூல் எழுதப்பட்டதால் விஞ்ஞான முதிர்ச்சியுடன் மாணவர்களின் தரமும் மனதிற் கொண்டு அவர்கள் விளங்கக் கூடிய எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது புலனாகின்றது. ஒவ்வொரு பாட முடிவிலும் ஞாபகத்துக்குரிய குறிப்புகளும் போதியளவு பயிற்சிக் கேள்விகளும் சேர்க்கப் பட்டுள்ளன. படங்கள் யாவும் பெரிதாகவும் அழகாகவும் மாணவர்களைக் கவரக் கூடிய முறையில் அச்சிடப்பட்டிருப்பதும் இந்நூலின் சிறப்பாகும். மாணவர்களின் தரத்துக் குட்பட்ட செய் முறைகள் வேண்டியளவு கொடுக்கப்பட்டுள்ளன மாணவர்களைச் சிந்திக்கச் செய்யும் பல கேள்விகள் பயிற்சிகளில் மாத்திரமன்றி செய்முறைகளிலும் கொடுக்கப் பட்டிருப்பது மாணவர்களின் அறிவைத் தூண்டி வளர்க்க உதவும். சுருங்கக் கூறின் ஆரம்ப விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களின் சுமையை இந் நூல் நீக்கும் என எண்ணுகின்றோம்.

சிஸ்ரர்
எம் ரி இம்மானுவேல்

### இனி நாம் செய்யவேண்டியது

பறவைகளைப் போல் ஆகாயத்தில் பறக்கக் கற்றுக்கொண்டு விட்டோம். மீனைப்போல் நீருக்கடியில் நீந்தவு நமக்குத் தெரியும் இனி மனிதர்களைப்போல் பூமியிலே நடக்கக்கற்றுக் கொள்ள வேண்டியது மாத்திரமே நாம் செய்ய வேண்டிய காரியமாகும்!


றேயல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தார்

வழங்கும் வாராந்த

பரிசுப்பொட்டலம்




10/75

நீங்கள செய்யவேண்டியது மிகச்சுலபமே நீங்கள் வாங்கும் றெமிகுரு ரால்கம் பவுடர் (பெரிது) பேணியல் வரும் ஒரு லேபிளையும், றேயல் நீலம் இரு லேபல்களையும் சேர்த்து அனுப்புங்கள்;

ஒவ்வொரு திங்கட்கிழமையும், ஈழநாடு தினசரியில் "றேயல் அதிர்ஷ்டசாலி" யாரென்பதைக்கண்டுபிடித்துவிடலாம்.

றேயல் அதிர்ஷ்டசாலி மூவருக்கு பரிசு வீடு தேடிவரும், விரையுங்கள்;

சென்றவாரம் யாருக்கும்பரிசுகளைப் பெறுமையினால் இவ்வாரம் பரிசுத்தொகை இரட்டிப்பாகிறது;




2/50

இப்போட்டியில் றேயல் இன்டஸ்றிஸில் கடமையாற்றுபவர்கள் எவரும் சலந்து கொள்ள முடியாது.

றேயல் இன்டஸ்றீஸ், கொழும்பு - போன்: 26679

யாழ்ப்பாண முகவரிக்கே உங்கள் கடிதங்களை அனுப்புங்கள் அல்லது நேரில் ஒப்படையுங்கள்

றேயல் இன்டஸ்றீஸ்

பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் அருமருந்து சிரிப்பு!

ஜோ ஏ.எம்.தாஸ்

நோய் தீர்த்து ஆரோக்கியத்தை வளர்க்கும்; இன்பச் சிரிப்பு என்று காரணத்தோடு கூறுகிருர்கள் பல டாக்டர்கள்.

ஒருநாள் ஒரு கிழவி தன் வீட்டுக்குள் ஊசி ஒன்றைத் தொலைத்து விட்டு, அந்த ஊசியை வீட்டுக்கு வெளியே நிலா வெளிச்சத்தில் தேடிக்கொண்டு நின்ருளாம். அப்பொழுது அந்த வழியாகச் சென்ற ஒரு சிறுவன், கிழவியை நோக்கி, "பாட்டி, நீ எதை இங்கே தொலைத்துவிட்டுத் தேடுகிருய்? என்று கேட்க, அதற்குக் கிழவி "நான் ஊசியை என் வீட்டுக்குள் தொலைத்துவிட்டேன். அங்கே ஒரே இருட்டாக இருப்பதால், இங்கே வந்து நிலா வெளிச்சத்தில் தேடுகிறேன். சந்திரன் பால்போல் பிரகாசிப்பது கண்ணுக்கு நல்ல வெளிச்சமாக இருக்கிறது..." என்று கூறினளாம்!

இந்தக் கதையைக் கேட்கும் பொழுது நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சிரிக்கத்தான் வேண்டும்; இதோடு சற்றுச் சிந்திக்கவும் வேண்டும் இந்த உலகத்திலுள்ள மக்களும் 'ஊசியைத் தொலைத்த பாட்டி'யைப் போன்றவர்களே. தங்கள் உள்ளத்துள் சிறந்த மருந்தை வைத்துக்கொண்டு, வீண் மனக்கவலையால் கொடிய வியாதிகளை வருவித்து அதன் பிறகு ஏதேதோ மருந்துகளை அருந்துகிருர்கள்.

"உள்ளத்துள் வைத்திருக்கும் சிறந்த மருந்து எது?" என்று நீங்கள் கேட்கலாம். அதுதான், சிரிப்பு! அந்தச் சிரிப்பின் சிறப்பைச் சிறிது அறிந்துகொள்வோம்.

சில ஆண்டுகளுக்கு முன் டாக்டர் பாஸ்கிணடு, டாக்டர் பாவ்லோவ், டாக்டர் கெனன் முதலிய வைத்திய நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சிக் கூடத்தில் செய்த நூற்றுக்கணக்கான சோதனைகளின் மூலம். இதை நிரூபித்துக்காட்டினர்கள். சிரிப்பு தசைநார்களுடைய விறைப்பைக் குறைத்து, அவற்றுக்குச் சமனம் அளிக்கிறது. ஆனல் முகத்தைச் சுழிப்பது தசைநார்களின் விறைப்பை அதிகரிக்கச்செய்கிறது. அப்படியே கவலை, பயம், கோபம் முதலியனவும் களைப்பையும் சக்தி நஷ்டத்தையும் உண்டாக்குகின்றன என்பதையும் கண்டுபிடித்தார்கள்.

சிரிப்பு. தேகத்துக்கு மட்டுமல்லாமல் மனதுக்கும் சுகம் அளிக்கிறது. உலகத்திலே ஆண்களைவிடப் பெண்கள் அதிக நோயாளிகளாக இருக்கிருர்களாம்! இதற்குக்காரணம் சொல்லும் வைத்திய மேதைகள்; "பெண்மணிகள் ஆண்களைவிடக் கொஞ்சமாகச் சிரிக்கிருர்கள். அதுவும் பெண்கள் அதிக நோயாளிகளாக இருப்பதற்கு ஒரு முக்கியமான காரணம்" என்று கூறுகிருர்கள் குடும்பப்பெண்கள் அதிகமாகச் சிரிக்கக்கூடாது என்பதே இதற்கு மூலகாரணமாக இருக்கலாம்! 'புகையிலையை விரித்தால் போச்சு; பெண் பிள்ளைகள் சிரித்தால் போச்சு' என்று நம் நாட்டில் உலவிவரும் நாடோடிப்பழமொழியே இதற்குச் சான்று. ஆனல் இந்தக் குருட்டு நம்பிக்கை சரியான ஒன்றல்ல. சிரிப்புக்கும் கற்புக்கும் சம்பந்தமே கிடையாது!

"உலகத்திலுள்ள எல்லாரும் நல்ல விகடச்சுவையுடன் நிறையச் சிரிப்பவர்களாக இருப்பார்களானல், அநேகம் வைத்தியசாலைகளை மூடிவிடவேண்டி வரும்: டாக்டர்கள் அநேகருக்கு வேலையில்லாமல் போய்விடும் ஏன் யுத்தங்கள் கூட ஒழிந்துவிடும். என்று ஒருபிரபல டாக்டர் கூறியுள்ளார். இதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது!

மற்ெருரு டாக்டர் 'தேகாப்பியாசங்களுக்கெல்லாம் சிறந்த அப்பியாசம் சிரிப்பு. அது



இக்கட்டுரையாளர் ஜோ. ஏ. எம். தாஸ் அவர்கள் ஒரு பத்திரிகையாளர் இலங்கையில் வீரகேசரி தினபதி பத்திரிகையிலும், புதினம், 'விவேகி' முதலான சஞ்சிகைகளிலும் பணியாற்றியவர் பின்னர் தமிழகத்தில் 'தினகரன்' பத்திரிகையில் பணியாற்றி வந்தவேளை சில மாதங்களின் முன் அமரரானர். அன்னர் யாழ்ப்பாணத்திலிருந்த காலை யாழ். மாநகரசபையின் சுகாதார ஏடான 'சுகாதார ஒலி'யில் எழுதிய இக்கட்டுரை 4 10-85 'உதயதாரகை' இதழில் மறுபிரசுரமாகியுள்ளது. தாஸ் அவர்கள் தமது பாரியாருடன் படத்தில் காணப்படுகிருர். [ஆ-ர்.]

மிகவும் ஆரோக்கியமான அப்பியாசம். தேகத்துக்கு புத்துயிர் அளிக்கிறது பசித்தீபனத்தையும் ஜீரண சக்தியையும் அதிகரிக்கச்செய்கிறது இரத்த ஓட்டத்துக்கு உத்வேகமும் கண்ணுக்கு ஒளியும் முகத்துக்குக் களையும் கொடுக்கிறது. மனமகிழ்ச்சியுள்ள மனிதன் நன்ருகவேலை செய்யவும்பொதுவாக வாழ்க்கையை அநுபவித்துச் சுவைக்கவும் முடியும்" என்கிருர்.

சில சமயங்களில் சிரிக்கும் பொழுது கண்ணீர் வந்துவிடுகிறது; கண்களைச் சுற்றியுள்ள சில தசைநார்கள் சுருங்குவதே இதற்குக் காரணம்

சிரிப்பிலே பலவிதமான சிரிப்புக்கள் இருக்கின்றன ஆனல், சிரிப்புகளிலெல்லாம் இன்பமான சிரிப்பு; குழந்தைகள் விளையாடும் பொழுது அவை சிரிக்கும் ஆனந்தச் சிரிப்புத்தான்! குழந்தைகளின் சிரிப்பைப் பற்றி ஓர் இடத்தில் தமிழறிஞர் ராஜாஜி அவர்கள் குறிப்பிடுகையில், "புல்லுக்கு மழை போல். குழந்தைகளுக்குச்சிரிப்பு சிரிப்புநல்லமழையில் மூழ்கவேண்டும். கோபச் சிரிப்பு உதவாது; பொருமைச் சிரிப்பு உதவாது; வேஷச் சிரிப்பு உதவாது; வியப்பும மகிழ்ச்சியும் கலந்த சிரிப்பே ஆரோக்கியச் சிரிப்பு" என்கிருர்.

"குழந்தைகள் சிரிக்கச் சகியாதவர்களை நம்பாதீர்கள்" என்று கூறுகிருர், வொட்டர் என்ற பெரியார். குழந்தைகளைச் சிரிக்க வைப்பதற்கு அதிக ஹாஸ்ய ரஸமுள்ள சம்பவங்கள் வேண்டியதில்லை அவர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள விளையாட்டுப் புத்தியின் ஒரு பாகமே சிரிப்பு என்று சொல்லலாம்.

நோயற்ற வாழ்வை மனிதர்கள் வாழ வேண்டுமானல் பிராண வாயுவைச் சிரிப்பின் மூலம் சுலபமாக அடைய முடியும். தேகாப்பியாசமில்லாமலும் சிரமம் எதுவுமின்றி சிரிப்பின் மூலம் இரத்தத்துக்குப் புத்துயிர் ஊட்டலாம்!

ஒரு பிரபல வைத்திய நிபுணர் "வைதானவர்களும் எப்பொழுதும் நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்கிறவர்களும் இந்தச் சிரிப்புக்கலையை அவசியம் பயிலவேண்டும் ஏனெனில் இவர்களுக்குச் சிரிப்பு, சிறந்த பயிற்சியாகும். பலமாகச் சிரிக்கும் பொழுது. ஈரல் தாங்கி உள்ளுறுப்பு (Diaphragm) மூன்று அல்லது நான்கு அங்குல உயரம் ஏறி இறங்குகிறது. இது இருதயத்தைப் பிடித்துப் பிடித்து விடுவது போல இருக்கிறது. சிரிப்பு, இரைப்பையையும் குடல்களையும் குலுக்குவது. ஒரு மருந்துப் புட்டியைக் குலுக்குவதற்குச் சமம்" என்ருர்.

'மனமகிழ்ச்சி, மெல்லுதலைப் போல் அவ்வளவு முக்கியமானது! சந்தோஷமாகச் சாப்பிட முடியா விட்டால் சாப்பிடாமலிருப்பதே உத்தமம்" என்று, ஹொரேஸ் பிளச்சர் என்பவர் கூறுகிருர் நாம்வயிறு நிறையப் புசித்த பின் அதிக ஜீரண சக்தி அவசியம். இந்தச் சமயத்தில் சிரிப்பு அதிக நன்மை செய்கிறது. சாப்பிட்டபின் சிறிது நேரம் விகடச் சுவையுள்ள கதைகளையோ, சம்பவங்களையோ சொல்லிச் சிரிப்பது, ஜீரண சக்தியை அதி தீவிரமாகச் செயலாற்றத் தூண்டுகின்றது.

பிரிட்டனில் மிகப் பெரிய வைத்திய மேதையாக விளங்கிய ஹார்டர் பிரபு, தம்மிடம் வரும் நோயாளிகளை நோக்கி, 'நீங்கள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்கிறீர்கள் என்பது தான் முக்கியம். கவலைப் படுகிறவர்களுக்கு நீண்ட ஆயுள் இராது அவர்கள் கவலைப்பட்டே அற்ப ஆயுளில் இறந்து விடுவார்கள்" என்பாராம்;

புன்சிரிப்புச் செய்வதற்கு இருபத்தாறு தசைநார்களும் முகத்தைச் சுழிப்பதற்கு அறுபத்தாறு தசைநார்களும் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிருர்கள். புன்சிரிப்பு நல்லதுதான் என்றாலும், வாய் விட்டு வயிறு குலுங்கச் சிரிப்பது அதைவிட நல்லது.

"கடவுளுடைய மருந்து. சிரிப்பு. அதை எல்லாரும் அருந்த வேண்டும்" என்று கூறுகிருர் டாக்டர் ஆலிவர் தெண்டல் ஹோம். ஆமாம்; சிரிப்பின் சிறப்பை அறிந்துகொண்டோம். இனி நாமும் நன்ருகச் சிரித்துச் சுகம் பெறுவோம்;

# தமிழினம் மறவாத தம்பிஐயா

## இன்று 3வது நினைவு தினம்

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, என்பது புறநானூற்றுப் பொன் மொழி.

உணவில்லாது உயிர் வாழுதலியலாதாதலால் உண்டியே உயிர் என்க.

இவ்வாறுஉயிர் கொடுத்தவரைப் புறநானூறு பசிப்பிணி 'மருத்துவன்' என்று வர்ணிக்கின்றது.

இவ்வாறனமருத்துவர்களில் ஒருவர்தான் அமரர் அல்பிறட் எல். தம்பி ஐயா ஆவர்.

பிறர் அறியாவண்ணம் இவர் ஆற்றிய இம்மருத்துவ சேவை 1958 ம் ஆண்டு நிகழ்ந்த இனக் கலவரத்தில் அம்பலத்திற்கு வந்தது.

அந்த அகதிகளுக்கு உண்டி மட்டுமா அளித்தார், அமரர்? தெற்கிலிருந்து அத்தனை ஆயிரம் அகதிகளையும் தமது கப்பல் சேவையின் மூலம் தமிழ் மண்சேர்த்த தர்மமும் அவருடையது தான்.

தீவுப்பற்றின் முடிசூடா மன்னனுய் விளங்கிய திருவாளர் அல்பிறட் லியோ தம்பியையாவை நினைக்குந்தோறும்-அவர் தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவை எமது கண்முன்னே நிற்கின்றது. இன்று 3-11-85ல் அவரது 3வது சிராத்ததினத்தை நினைவு கூரும் நாம் அவருடைய அளப்பரிய தொண்டுகளையும் நினைத்துக் கொள்வது சாலவும் பொருத்தமே

ஊர்காவற்றுறையி லுள்ள கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமது ஆரம்பக்கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்ருர். தமது உயர்

ஜோ. எகட்டன்

கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்த இவர். கொழும்பிலுள்ள புனிதபெனடிக்ற் கல்லூரியிலும் புனித யோசவ் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்து கற்றடங்கியவரானர். அதன்பின் பெருமைக்குரிய தன் தந்தையார் தம்பியையா அவர்கள் வழிநடத்திய வணிகத்துறையில் ஈடுபட்டார்.

பிரித்தானியர் ஆட்சியில் உலகளாவிய வர்த்தகத்துறை யெல்லாம் ஆங்கிலேயரின் கைக்குள்ளே அடங்கிக்கிடந்ததென்பதை நாம் அறிவோம்; அவற்றுள் பெரும் வணிக நிறுவனமாகிய'காகோபோட் டிஸ்பாச் கோவிரிட்' என்னும் கப்பல் ஸ்தாபனத்தை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுத் திறம்பட நடத்தி அதன் நிர்வாகக் கிளைகளைப் பெருக்கினர்.

மேலும் உல்லாசப் பிரயாணத் துறையில் புகழ்பெற்ற

(10-ம் பக்கம் பார்க்க)


# தீபாவளி மலிவு விற்பனை

**1-11-1985 முதல் 11-11-1985 வரை**

**10% கழிவு**

- ★ ட்ரான்ஸ் காற்சட்டைகள் – (Trance Trousers)
- ★ டெனிம் – (Denim)
- ★ நோபில் சேட்ஸ் – (Kraig Noble Shirts)
- ★ ரீ சேட்ஸ் – (T'Shirts)
- ★ பேபி சூட்ஸ் – (Baby Suits)

மற்றும் மலிவு விலையில்

- ★ கூறைச் சேலைகள்
- ★ மணிப்புரி
- ★ காஞ்சிபுரம்
- ★ காற்சட்டைத்துணிகள்
- ★ சாரங்கள்
- ★ சேட் துணிகள்
- ★ துவாய்கள்
- ★ சித்தவைகைகள்
- ★ பொலியஸ்டர் துணி வகைகள்

சகலவிதமான ஆடை அணிகளுக்கும்;—
விஜயம் செய்யுங்கள்

**லிங்கம் சில்க் ஹவுஸ்** (ரெடிமேட் சொப்)

18, நவீன சந்தை — 21, மேல்மாடி நவீனசந்தை,
யாழ்ப்பாணம். போன்: 23684

(1547)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறண்ட வலயங்களில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏறக்குறைய இக்காலத்தில் இலங்கையின் ஈரப்பகுதியில் தென்மேல் பருவ மழைவீழ்ச்சி வெள்ள நிலையை உருவாக்குகின்றது. இந்தியாவிலும் இதே நிலைதான். இதேசமயம் வலிகாமம் விரிகுடா அமுக்க இறக்கங்களும் சிறு சந்தர்ப்பம் இம்மாதத்தில் உண்டெனலாம்.

## ஆகஸ்ட் மாத மழை வீழ்ச்சி

இம் மாதமும் வறட்சியுடையதாய் இருந்தபோதும் சராசரி மழையில் சிறிது அதிகரிப்புக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 1.06 அங்குலமாகவும் மழைநாட்கள் இரண்டுமாக உள்ளன. காங்கேசன்துறையில் 1.46 அங்குலமாகவும் மழைநாட்கள் மூன்றமாக உள்ளன. மேலும் ஊர்காவற்றுறையில் 1.06 அங்குலமாகவும் மழைநாட்கள் இரண்டாகவுமுள்ளது. அதேசமயம் பளையில் 0.60 அங்குலமாகவும் நெடுந்தீவில் 0.84 அங்குலமாகவும் உள்ளது. இங்கு மழைநாட்கள் ஒன்றுதானுண்டு. கடந்த ஆண்டுகளில் குறிப்பாக இந்த மாதத்தில் நிகழ்ந்துள்ள கூடிய மழைவீழ்ச்சியை அடுத்ததாகப் பார்க்கலாம். 1981-ல் ஏறக்குறைய 8.0 அங்குலங்களும் 1977-ல் 4.00 அங்குலங்களும் மழையாகப் பெய்துள்ளது. 1954-ல் 3.13, 1949-ல் 4.28, 1933-ல் 4.00, 1932-ல் 3.00, 1924-ல் 3.00, அங்குலங்களும் பெய்துள்ளன. காங்கேசன்துறையில் 1906-ம் ஆண்டு 5.10" இம்மாதத்தில் பெய்திருக்க யாழ்ப்பாணத்தில் இதே மாதம் 2.89" பெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. காங்கேசன்துறையில் 1964-ல் 4.32 அங்குலம் பெறப்பட்டது. இத்தகைய மழை, குறிப்பாக யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் திடீர் மழை பெருமளவுக்கு தென்மேல் பருவக்காற்றின் சடுதியான தளர்வீட்டால் பெய்யும் மழையாகத் தானிருக்கவேண்டும்.

## செப்ரெம்பர் மாத மழைவீழ்ச்சி

இந்த மாதத்தில் மழை மேலும் சராசரியாகச் சிறு அதிகரிப்பைக் கொண்டு இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் 1.97 அங்குலம் பெறப்பட மூன்று நாட்கள் மழை நாட்களாக உள்ளது. காங்கேசன்துறையிலும் 1.98 அங்குலம் பெறப்பட நான்கு நாட்கள் மழை நாட்களாக உள்ளது. ஊர்காவற்றுறையில் 1.46 அங்குலமாகவும் இரண்டு நாட்கள் மழை நாட்களாகவும் நெடுந்தீவில் 1.11 அங்குலமாகவும் மழை நாள் ஒன்றாகவுமிருப்பது குறிப்பிடத்தக்கது. பளைப் பகுதியில் 1.31 அங்குலமாகவும் மழைநாட்கள் இரண்டாகவுமிருக்கின்றது. இந்த மழைவீழ்ச்சி "ஆவணி விதைப்பு மழை" எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றது. ஆனாலும் சில சமயங்களில் இது விதைப்புக்களைப் பாதித்து குறிப்பிட்ட நாட்களுக்கு வெள்ள நிலைகளைச் சில ஆண்டுகளில் உருவாக்கியுள்ளது. சிறப்பாக யாழ்ப்பாணத்தில் 5.65 அங்குலமும் காங்கேசன்துறையில் 10.29 அங்குலமும், 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மழை பெய்துள்ளது. 1926-ல் முறையே 5.55 அங்குலமும் 6.44 அங்குலமும் பெறப்பட்டது. தொடர்ந்து நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் 1937, 1941, 1946, 1947, 1966, 1975, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளுக்குரிய செப்ரெம்பர் மாத மழைவீழ்ச்சி முறையே 7.34, 8.70, 4.78, 7.09, 9.40, 4.0, 7.5, 6.5 அங்குலங்களாக இருந்திருக்கின்றன. இதேநிலை யாழ்குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்பட்டது. நுணுக்கமாகப் பார்த்தால் சில வேறுபாடுகள் இருக்கும். இந்தத் திடீர் மழைக்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று தென்மேல் பருவக்காற்று பின்வாங்கும் போது ஏற்படுகின்ற விளைவு; மற்றது தொடர்ந்து ஏற்படும் மாரிகாலத்தின் விளைவு.

### விளக்கம்

மேற் குறிப்பிட்ட வறண்ட மாதங்கள் முன் கூறியது போல மழை எதிர்பார்ப்புக்கு இடம் அற்றவை. சராசரியாக மழையுண்டு எனக் கூறினும் பெரும்பாலும் மழையற்ற நாட்களையும், மாதங்களையும் கொண்டவை. தொடர்ச்சியாக வறட்சியை அனுபவிக்கும் வழக்க முடையவை. ஆயினும் இந்த வழக்கத்திற்கு மாறாக இந்த மாதங்கள் திடீர் மழை வீழ்ச்சியையும் வெப்ப நிலையையும் கொண்டிருக்கின்றன என்பதும் விளக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தத் திடீர்மழைநிகழ்வுகள் ஏற்படுகின்றன என்பதற்கான விளக்கங்களை தொகுத்து நோக்கினால் அவை பின்வருமாறு இருக்கலாம்.

யாழ். குடா நாட்டிற்கும் ஏனைய இலங்கையின் வறண்ட பகுதிகளுக்கும் வறட்சியான காற்றாக தென் மேல் பருவக்காற்று இருந்த போதும் சில சமயங்களில் மழையைக் கொடுக்கும் காற்றாக இருக்கிறது. இக் காற்று தரைக் காற்றாக அன்றி கடற்காற்றாக யாழ். குடாநாட்டை நோக்கி வீசும்போது நீராவி கொண்ட காற்றாக மழை கொடுக்கும் காற்றாக இருக்கும். தென்னிந்தியாவுக்கும் இலங்கையின் மேற்குக்கரைக்கும் இடையாக வீசும் போதும் மன்னார்க் காற்றின் பாதிப்பு ஏற்படும் போதும் மேற்கூறிய நிலை ஏற்பட வழி உண்டு. இத்துடன் சேர்ந்து நாளாந்த மேற்காவுகை நிகழ்வும் திடீர்மழையைக் கொடுக்கலாம். வழக்கமாக இலங்கையின் ஈரப் பகுதியில் பெறப்படும் மழை வெள்ளமாக இருந்தால் இலங்கையில் வறண்ட பகுதிக்கும் அச்சமயத்தில் மழை பெறப்படுவது நிச்சயமாக தென்மேல் பருவக்காற்றின் பாதிப்பு எனலாம். இந்த மழை தென்மேற்கிலிருந்து கிடைப்பதாய் இருக்கும்.

வங்காள விரிகுடா தாழமுக்க அபிவிருத்திகள் ஒக்ரோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களில் உச்ச நிலையைக் கொண்டிருந்த போதும் யூன், ஆகஸ்ட் மாதங்கள் தவிர்ந்த ஏனைய மாதங்களிலும் அதற்கான வாய்ப்புண்டு. மேற் குறிப்பிட்ட வறண்ட மாதங்கள் குறிப்பாக தென்மேற் பருவக்காற்று தற்காலிகமாகப் பின்வாங்கும் போது அவற்றுக்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன. இதனால் திடீர்மழை ஏற்படலாம். இவற்றை விட இயக்க காலநிலையியல் ரீதியாக பல விளக்கங்கள் கூறலாம். எனினும் அவை பொது மக்களின் விளக்கத்திற்கு அப்பாற்பட்டவை என்பதால் அவை இங்கு கூறப்படவில்லை.

---

## இப்படியும் ஓர் அர்த்தம்

'ஈழநாடு' 27-10-85 வாரமலரில் "அறுவது நாளைக்கு எழுவது கத்தை" என்னும் பழமொழிக்குக் கொடுத்துள்ள விளக்கத்தைக் கண்ணுற்றேன். அதன் பொருள் இப்படியும் அமையலாம்; அறுவது நாளைக்கு-அழிந்துபோகும் காலம் வந்தால்; எழுவது கத்தை - நான் என்னும் அகங்காரம் எழும். அதாவது ஒருவருக்குநான் என்னும் அகங்காரம் எழுந்தால் அது அவருடைய அழிவு காலத்திற்கு அறிகுறி நாளைக்கு என்பது காலத்தைக் காட்டும்.

மு. வைத்திலிங்கம்

---

> சிரிக்கும் சக்தி என்னிடமில்லாதிருந்தால் நான்எப்பவோ செத்திருப்பேன்.
>
> — மகாத்மாகாந்தி

## தமிழினம் மறவாத

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹோட்டலை ஸ்தாபித்து ஹோட்டல் நிர்வாகத்திலும் முன்னணியில் திகழ்ந்தார். அத்துடன் ஆங்கிலேயரால் நட்டத்தில் நடாத்தப்பெற்று நட்டத்தில் கைவிடப்பட்ட ஸ்தாபனங்களையும் கைபேற்று அவற்றின் அதிபராகித் திறம் படநடத்தினார்.

அக்காலத்தில் கொழும்பு மாநகரில் தமிழ் மக்கள் சுயமரியாதை கௌரவத்தோடு வாழ்வதற்கும் எத்தனையோ இளைஞர்கள் அங்கு வேலை வாய்ப்புப் பெறுவதற்கும் அமரர் அல்பிறட் டியோ தம்பி ஐயா அவர்களே முன்னோடியாக விளங்கினார். எத்தனையோ தமிழ்க் குடும்பங்களுக்கும் குறிப்பாக தீவுப்பகுதியிலுள்ள மக்களுக்கும் வளமான வாழ்வளித்த வள்ளலாய் இவர் விளங்கினார்.

1947ம் ஆண்டு முதல்முறையாக பாராளுமன்ற அங்கத்தவராக ஊர்காவற்றுறைத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் மக்களுக்கு அளித்த தன்னலமற்ற சேவையின் மூலம் 2வது முறையாகவும் மகோன்னத வெற்றியைப் பெற்றார். அக்கால அரசியல் வாழ்க்கையில்தான் தமிழ் மக்களுக்கு குறிப்பாக தீவுப்பகுதி மக்களுக்கு இவர் தமது விரிவான சேவையை ஆற்றினார். பண்ணை, புங்குடு தீவு பாலங்கள் வேலணை மத்திய கல்லூரி, தீவுப்பகுதியெங்கும் பல ஆரம்பப் பாடசாலைகள் வானொலி தந்திப் பரிவர்த்தனைச் சேவைகள் முதலியன இவரால் ஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். அத்துடன் தீவுகளுக்குக் கடல் மார்க்கமான பிரயாண சேவைகளையும் தொடக்கிவைத்தார்.

வணிகத் துறையிலும் அரசியல் வாழ்விலும் கொடிகட்டிப் பறந்த இவர் திரைப்படத் துறையிலும் தன்னிகரில்லாத் தலைவனாய் விளங்கினார். திரைப் படத்தொழிலை முதன்முதலாக இலங்கையில் ஆரம்பித்தவர் இவர்தான். இவர் கட்டியெழுப்பிய சினிமா தியேட்டர் நிறுவனங்கள் இன்னும் சினிமாக்கலை வளர்ச்சிக்கு மூலாதாரமாய் விளங்குகின்றன.

1958ல் இலங்கையின் இனக்கலவரம் முதன்முதல் நாட்டையமாடிய காலங்களில் தென் பகுதியிலிருந்த தமிழ் மக்களை மானத்தோடு காப்பாற்றிய பெருமகனார் இவரே அக்காலத்தில் தன் நிறுவனத்தின் கப்பற் சேவைமூலம் தமிழ் மக்களைக் கப்பலேற்றிவந்து பாதுகாப்பாக தமிழ் பிரதேசங்களில் விட்ட இந்தத் தலைமகனாரை எக்காலத்துக்குமே ஈழத் தமிழினம் மறந்து வாழாது. அவரின் வழியதாக அவருடைய பிள்ளைகள் அவருடைய வர்த்தக நிறுவனங்களை இன்றும் செழிப்போடு பரிபாலித்து வருகின்றனர்.

கல்வித்துறையில் அரும்பணியாளனாய், வணிகத் துறையில் மேன்மை தங்கியவராய் அரசியல் வாழ்வில் கடமை தவறாத கண்ணியவானாய், தமிழ் மக்களின் பொதுநல சேவைக்கே தன்னையே அர்ப்பணித்த பெரும் தொண்டனாய் விளங்கிய அமரர் திருவாளர் அல்பிறட் டியோ தம்பிஐயா அவர்களின் பெரும்புகழ் நீடுவாழ அவரின் ஆன்மா இறைவன் திருப்பாதத்தில் கலந்துறைந்து தமிழ் மக்களுக்கு வாழ்வும் வளமும் காண தமிழ் மக்களாகிய நாம் ...

# இவ்வாரம் எப்படி?

> ## இன்று
>
> மாதம்—ஐப்பசி
> திகதி— 18 (1985-11-3)
> ஞாயிற்றுக்கிழமை
> திதி — பஞ்சமி காலை 8-16 ன் மேல் ஷஷ்டி
> நக்ஷத்திரம்- திருவாதிரை பி ப 2.26 ன் மேல் புனர்பூசம்

### மேடம்

பணம்! புதிய நண்பர்களைக் கொண்டுவரும். மக்கள் பணியில் ஈடுபாடு காட்டுவீர். அறிவாளிகளின் ஆதரவும் உண்டு. பூமிப் பிணக்குகள் நிவர்த்தியாகும் எதிர்பாராத வரவுகளுக்கு இடமுண்டு.

### இடபம்

அவசரம்வேண்டாம். ஆயுத பீடைக்கு இடமுண்டு. நிலை, நிதானம், அமைதி உன் காவடியில். உறவுமுறைகளில் பிளவு தோன்றலாம்.

### மிதுனம்

கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடம் ஏற்படும். குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். உடல் நலமும்சிறிது பாதிக்கப்படும். உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

### கடகம்

நீண்டநாள் எதிர்பார்த்த விடயம் நிறைவேறும். பெரிய இடத்துச்சகவாசம் உங்களுக்கு செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வு காணும், வியப்பூட்டும் செய்திக்கு இடமுண்டு. புதிய நண்பர்களின் உறவுக்கும் இடமுண்டு.

### சிங்கம்

தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும். இதனால் பொருள் விரயத்துக்கும் இடமேற்படும். குடும்பத்தில் உடல் நலக்குறைவு தோன்றும் சகோதரவழியால் வரவுக்கும் இடம் உண்டு.

### கன்னி

தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன விருத்தி உண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றமுண்டு.

### துலாம்

இனத்தவர் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தேடித்தரும். வீட்டிலும் நல்ல சூழ்நிலை நிலவும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண்பீர்கள்.

### விருச்சிகம்

நம்பிக்கை மோசடி நடக்கக் கூடும். நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம் செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத தற்காலிகபிரிவுக்கும் இடமுண்டு.

### தனுசு

இல்லத்தில் இனிமை நலவும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கு உயரும். ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்குப் பொன்னான வாரம்.

### மகரம்

பணத்தைக் கொடுத்துப் பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். தொழில் துறையிலும் சோர்வு தென்படும். நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள். நிதான புத்தியுடன் நடக்கவும். புதியமுதலீடுகளை ஒத்திவைக்கவும்.

### கும்பம்

குருவின் ஆசியுடன் குறிக்கோளில் வெற்றிகாண்பதற்கு இடமுண்டு. நேர்முகப் பரீட்சை வெற்றிதரலாம் பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

### மீனம்

ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். முயற்சியால் முன்னேற்றம் உண்டு. இனபந்துகளுடன் தொடர்புகள் பெருகும். புதிய உடன்படிக்கை மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

திருமலை
க.வே.ரவீந்திரன்

---

## தேக்கம்

இப்போது
ஓடவழியின்றி
ஒழுங்கையில்
தண்ணீர்.

ஓடவகையின்றி
இலங்கையில்
தமிழர்
கண்ணீர்!
இரண்டுமே
தேங்கிநிற்கின்றன!

– க. கணேசலிங்கம்

---

## அமெரிக்காவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோட்" (India Abroad எனும் ஆங்கில வாரப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகையின் மொத்த விநியோகம் 50,000 பிரதிகள் எனத் தெரியவருகிறது.

### சொந்தமண்ணில் அக்கறை

இந்தியாவில் சகல மொழிகளிலும் வெளியிடப்படுகின்ற சினிமாப் படங்கள்—மறுவாரமே இங்கு வீடியோ கசட்டில் பெறமுடிகின்றது.

தமது சொந்த நாட்டைவிட்டுப்பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால், இந்திய மக்கள் வாழ்ந்தாலும் கூட இந்தியாவின் குக்கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்களாகச் சிலர் இருக்கின்றனர். இவ்வாறான அக்கறையுள்ளவர்கள் அங்கிருக்கின்ற கிராமங்களில் கல்வி, சுகாதார, குடிநீர் போன்ற துறைகளை முன்னேற்றுவதற்காக வேண்டி திட்டமிட்ட வகையில் பணிபுரிகின்றார்கள்.

இன்னும் சில இந்திய நிறுவனங்கள் இந்தியாவின் கிராமங்களில் வசிக்கும் திறமைமிக்க ஏழை எளிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கென உபகாரப்பணத்தினையும் வருடாவருடம் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவருகின்றன.

இந்திய நாடு மீதும் இந்திய மக்கள் மீதும் அமெரிக்க மக்களுக்கு என்றும் தனியான விசேடமான அக்கறை இருந்து வருவதைக் காணமுடிகின்றது.

இந்தியா தான் காந்தி தான் இந்தியா என்ற எண்ணம் கொண்டவர்கள் பலர் இருக்கின்றனர்.

காந்தி மகானை இன்று மதிக்கும் மக்களை அமெரிக்காவில் காணமுடிகின்றது.

அமெரிக்காவில் வசிக்கின்ற ஏனைய இனத்தவர்களைவிட இந்திய மக்கள் இங்கு ஒற்றுமையாகவும், நட்புணர்வு மிக்கவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றுசாக்கு ஏல விற்பனை

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரிவு ப. நோ. கூ. சங்கத்தில் 6-11-85ந் திகதி காலை 10 மணி அளவில் 7000 வெற்றுச் சாக்குகள் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்று பவர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 200/- செலுத்தி ஏலத்தில் எவரும் பங்கு பற்றலாம்.

பொதுமுகாமையாளர்,
வ. தெ. த. பி. ப. நோ. கூ. சங்கம்,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா
1525

**சரவணபவன் மினி**
சினிமா
(4 அடி அகலத்திரையில்)
10-30, 2-30, 4-30, 7-00
PRIVATE LESSON
(Part II)

**உஷா மினி**
10-30, 2-30, 4-45, 6-45
Sean Connery as James Bond 007 in
NEVER SAY NEVER AGAIN
Sean Connery கடைசியாக நடித்த ஜேம்ஸ் போண்ட் சண்டைப்படம்

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந், அம்பிகா
"தண்டனை"
(பயங்கரச் சண்டைப்படம்)

**மனோகரா**
வெண்திரையில்
இன்றுமுதல்
10-30, 2-30, 6-30
மோகன், பூர்ணிமா
நடித்த
பயணங்கள் முடிவதில்லை
(கலர்)
இனிய பாடல்கள் நிறைந்த படம்

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
10-30, 2-30, 4-30 6-30,
கமல் ரீனுராய், சரிகா, சத்யன். கபூர்
Karishmaa
ஹிந்தி
பயங்கர சண்டைகள், கார்ரேஸ், உள்ளத்தை கொள்ளை கொள்ளும் காதல் காட்சிகள், இனிய பாடல்கள் நிறைந்த படம்.

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-15, 6-30
பயங்கர காட்சிகள் நிறைந்த
POLTER GRIST
(கலர்)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ சினிமா**
10 30 2-15, 4 30, 6-30
Playing with Fire
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும் ஆண் பெண் பாலியல் காட்சிகள் நிறைந்த படம். முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப்படுகிறது.

## உயிரின வாயுகூட அமைப்பிற்கான கூறுவிலை கோரல்

முல்லைத்தீவிலுள்ள குமுழமுனைக் கிராமத்தில் 2 கன மீற்றர் பரிமாணமுள்ள உயிரின வாயுக்கூடம் (Bio-gas-Plant) அமைப்பதற்கான கூறுவிலைகள் (Quotation) இத்தால் கோரப்படுகின்றன. இவ்வுயிரினவாயுக்கூடம் அமைப்பதற்கான (இந்திய உற்பத்தி) நிர்ணக்கல அளவு பிரமாணங்களை முல்லைத்தீவு கச்சேரியில், காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். கூறுவிலைகள் 27-11-1985 அன்று அல்லது இத் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "உயிரினவாயுக்கூடம் அமைப்பதற்கான கூறுவிலைகள்" என எழுதப்பட்டல் வேண்டும். இந்திய மாதிரியைத் தவிர்ந்த வேறு உயிரின வாயுக்கூட அமைப்புக்கான கூறுவிலைகளும் கவனத்துக்கு எடுக்கப்படும்.

1985-ம் ஆண்டு நவம்பர் 1-ம் திகதி,

கச்சேரி,
முல்லைத்தீவு.
(1555)

க. பொன்னம்பலம்,
முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும்.
அரசாங்க அதிபரும்.

## மெதடிஸ்த திருச்சபை பெண்கள் விடுதி

பாடசாலை மாணவிகளுக்கும் வைத்தியக் கல்லூரி மாணவிகளுக்கும் ஏற்றதாகவும் பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக சகல வசதிகளுடனும் விடுதி வசதி உண்டு.

தொடர்பு: முகாமையாளர்,
வேம்பஸ்தான் பெண்கள் விடுதி,
306, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C. L. S. புத்தகசாலைக்கு அருகில்) 1563

## LIBRAS LTD.

மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி உங்களை இங்கிருந்து NOVEMBER 21 திகதி கூட்டிச் செல்வார்.

மற்றும் சகல விமான பயணச் சீட்டுக்களுக்கும், பாஸ்போட், பெர்மிட், விசா என்பவற்றுக்கும் தொடர்பு கொள்ளவும்.

## லிப்ருஸ் லிமிட்டெட்

R G. கட்டிடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்
No, 60, SEA BEACH ROAD,
COLOMBO - 13
T P. 29148

## வேலைவாய்ப்பு பிரயாண ஒழுங்கு

ஈராக் Super Market - Sales Boys and Girls)
அபுதாபி (Drivers H/V)

பாஸ்போட் 2 கிழமைகளில் பெற்றுதரப்படும் America, Mexico, Frankfurt Berlin ஆகிய நாடுகளுக்கு விசாவுடன் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார். சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுகளுக்கும்:

GROUP ATLANTIC
(TRAVELS DIVISION)
சின்கள மகாவித்தியாலய முன்பாக
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 1574

## மரண அறிவித்தல்

### திரு. தில்லையம்பலம் கந்தசாமி

தம்பாலை அக்கவெளியை சேர்ந்த தில்லையம்பலம் கந்தசாமி அவர்கள் 1-11-85ல் காலமானார். இவர் திருமதி மனோன்மணியின் அன்புக்கணவரும் திருமதி தவமலர் சித்திரவடிவேலு, திரு ஸ்ரீகந்த நடராசா (Widnell and Trollope Oman திருமதி விமலாமலர் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத்தந்தையாரும்காலஞ்சென்ற சித்திரவடிவேலு (யாழ் பல்கலைக்கழகம்) திருமதி யமுனா ஸ்ரீகந்த நடராசா, திரு கா சுப்பிரமணியம் (Gandi Metal Works) ஆகியோரின் அருமை மாமனாரும், கருணாசீலன் U K), தர்பசீலன் U K.) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2-11-85ல் ஈமக்கிரியைகளுக்காக அவர்களது குடும்பமயானத்திற்கு எடுத்துச்செல்லப் பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 1568

## தவறிவிட்டது

பராசசிங்கம் ஸ்ரீபாலகிருஷ்ணன் என்பவருடைய அடையாள அட்டை இல: 473100266V தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து இவ்விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் தரப்படும் 573, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1571

**நகைத்...**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
சென்று படுத்தாகவும் காலையில் பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டு மேசைலாச்சிகளிருந்த பவுண்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

அந்த அறையிலிருந்த றேடியோ, மணிக்கூடு மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்படவில்லையென்றும் பவுண் மட்டுமே கொள்ளையடிக்கப் பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். (க)

## சீன சஞ்சிகைகள்

சீனாவிலிருந்து வெளிவரும் சகல ஆங்கில சஞ்சிகைகளுக்கும் 1986ம் ஆண்டுக்கான சந்தாக்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சந்தாதாரர்களுக்கு அழகிய சீன சுவர்க்கலண்டர் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஸ்டாலின், மாவோ நூல்களுக்கும் கலை-இலக்கிய மற்றும் சிறுவர் வெளியீடுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ் புத்தக நிலையம்,
413, வீரசிங்கம் வீதி.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக)
யாழ்ப்பாணம். 1540

## TOEFL

### Test of English as a Foreign Language

America, Canada போன்ற நாடுகளில் colleges and universities களில் higher studies ஐத் தொடர விரும்புவோருக்கு அந்நாடுகளில் employment opportunities களை எதிர்பார்ப்பவர்களுக்கும் இப்பரீட்சையிற் சித்தி அவசியம்

11-1-86ல் COLOMBOவில் அடுத்த TOEFL EXAMINATION நடைபெறும்.
Commencement of our lectures: 9-11-85
WEEKENDS ONLY.
Full course fee:- Rs. 200/-

Lectures: பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்

**கன்ரேபியா கல்வி நிலையம்**
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

## ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்கும், மாவட்ட வருடாந்த செயற்படு திட்டத்திற்கும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளும் வேலைகள் மிகவும் தரமுயர்ந்த முறையில் செய்வதற்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. 1 மின்சாரம்:

1. 1. 1: அதிசக்தி (High Tension) வாய்ந்ததும், குறைந்தசக்தி (Low Tension) வாய்ந்ததுமான மின்கம்பிகளை அமைத்தல்
1. 1. 2, உள்ளக மின்கம்பி பொருத்துதல்

1. 2 சிவில் பொறியியற்துறை:

1. 2. 1. கட்டிடங்கள்,
1. 2. 2: வீதிகள்,
1. 2. 3. மதகுகள்;
1. 2. 4. சிறிய குளங்களைப் புனரமைத்தல்,
1. 2. 5. நீர் பாசன உறுதுணை அமைப்புகளை நவீனமயப்படுத்தல்
1. 2. 6. பாடசாலைக் கட்டிடங்கள்.

விண்ணப்பங்கள் கீழே கையொப்பமிட்டவருக்குப் பதிவுதபால் மூலம் 1985-11-20ந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுவதுடன் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்" என்ற சொற்கள் எழுதப்படல் வேண்டும். அரச திணைக்களத்துடனோ, அல்லது கூட்டுத்தாபனத்துடனோ ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அத்தகைய பதிவுகள் சம்பந்தமான விபரங்களையும் செயற்திறன் சான்றிதழ்களையும் இணைத்தல் வேண்டும். பகுதி உதவி அரசாங்க அதிபரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட பெறுமதிச் சான்றிதழின் புகைப்படப் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

க. பொன்னம்பலம்,
முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

1985-ம் ஆண்டு நவம்பர் 1-ந் திகதி
கச்சேரி,
முல்லைத்தீவு. (1554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR


# கண்காணிப்புக் குழு நாளை யாழ். வருகிறது!

(கொழும்பு)

பேச்சு நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நாளை 4-ந் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

பருத்தித்துறைச் சம்பவம், வல்வெட்டித்துறை சம்பவம் தொண்டைமானாறு சம்பவங்கள் யாழ். வீரசிங்கம் மண்டப தாக்குதல் சம்பவம் உட்பட யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளை இக் குழுவினர் ஆராய்வார்கள்.

யாழ்ப்பாணம் அசோக் ஹோட்டலில் இவர்கள் மேற் குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழுவினர் மற்றும், ஏனைய பொது ஸ்தாபனங்களின் முறைப்பாடுகளையும் ஆராய்வார்கள்.

வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு ஆகிய இடங்களையும் இவர்கள் நேரில் சென்று பார்த்து விசாரணை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப் படையினரையும் இவர்கள் சந்திக்கவுள்ளனர்.

யாழ் விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் எதிர்வரும் புதன் கிழமை செட்டிகுளத்திற்கு இக் குழுவினர் விஜயம் செய்வார்கள்.

யாழ். வீரசிங்க மண்டபத் தாக்குதல் சம்பவம் குறித்து 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இவ்விடயம் நாளை திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே இதனுடன் தொடர்புடையோர் 4ம் திகதி திங்கட்கிழமை கண்காணிப்புக் குழுவினரைச் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

பொதுமக்கள் தரப்பினரையும் ஆயுதப் படையினரையும் கண்காணிப்புக் குழுவினர் வெவ்வேறாகவே சந்திப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## 119 துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுத் துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்தே பொலிஸார் இத் திடீர் வேட்டையை மேற்கொண்டனர்.

## வவனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைச் சம்பவங்களின் போது இயந்திரத் துப்பாக்கிகளையே கொலையாளிகள் வைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## தண்டவாளம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் தென்னைமரம் ஒன்று சரிந்து விழுந்திருந்ததாகவும், பின்னர் அம்மரத்தை அகற்றிய பின்னர் யாழ் தேவி பயணத்தைத் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# பண்டாரியுடன் தமிழ்க்குழுக்கள் அடுத்த வாரம் சந்திப்பு!

(சென்னை)

ஈழ தேசிய விடுதலை முன்னணி ஈ.என்.எல்.எவ்,தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய ஈழத்தமிழ் அமைப்புகள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியை அடுத்த வாரம் புதுடில்லியில் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை செயல் திட்டங்கள் தமக்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்றும், திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்திக்கும் பொழுது தமக்களுடைய நிலைமை பற்றி இந்த ஈழத் தமிழ் அமைப்புகள் எடுத்துரைக்கும் என்று ஈழப் புரட்சி அமைப்பைச் (ஈரோஸ்) சேர்ந்த திரு. பாலகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் பஹமாஸில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் விபரங்களை இந்த தமிழ் அமைப்புகள் எதிர் பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகக் கூறப்படும் அத்து மீறல் சம்பவங்கள் குறித்து தமிழர்கள் கொண்டுள்ள கவலையை ஈழ தேசிய விடுதலை முன்னணி திரு. ரொமேஷ் பண்டாரியிடம் எடுத்துக் கூறும் என்றும் திரு பாலகுமார் தெரிவித்தார்.

இதே வேளை தமிழர்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளை பாவது நிறைவேற்றும் வகையில் இந்த நகல் திட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தெரிவித்துள்ளன. (ஜ)

## இலங்கையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் மருத்துவ மனைகள் மூடப்பட்டிருப்பதால் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ இந்திய அரச மருத்துவர்கள் குழுவொன்றை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கை நிலைவரங்களைப்பற்றி குறிப்பிட்ட திரு.நெடுமாறன் இலங்கையிலுள்ள நிலைவரங்களை நேரில் கண்டறிய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்றும் யோசனை தெரிவித்தார். (ச

## 50 குடும்பங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியலாளர் திரு. நடேசன் ஆகியோர் கடந்த இருதினங்களாகப் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு. வெள்ள நீரை கடலுக்குப்பாய்ச்சுவதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர். சுமார் 50 மாநகரசபை தொழிலாளர் வெள்ள நீரைப்பாய்ச்சுவதில் ஈடுபட்டுள்ளனர்.

கச்சேரி நாச்சிமார் குளம், மடத்தடி தேவரிக்குளம், மத்தி யூனியின் குளம் ஆரியகுளம் நாயன்மார்கட்டுக்குளம் ஆகியன நிரம்பிவழிந்துள்ளதால் அப் பகுதியிலுள்ள வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன,

மத்தியூஸ் வீதி, மருதடி ஒழுங்கையில், இரண்டு அடி வெள்ளம், காணப்படுகிறது. பாஷையூர் வாய்க்கால் அடைபட்டதால் வெள்ளம் தேங்கி நிற்கிறது;

யாழ். பஸ்நிலையத்திலும் இரண்டடி வெள்ளம் தேங்கி நிற்பதால் பல பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் நகரிலுள்ள பல கிணறுகள் நிரம்பியுள்ளன. சில இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்துள்ளன. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அதரவணத்தாரால் யாழ்ப்பாணம், இல. கோவில் மேற்கு வீதி, 65 ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 / 81 Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126,

# வெளிநாட்டவர் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி ரயிலில் நேற்று யாழ்ப்பாணம் நோக்கி வந்த வெளிநாட்டவர் ஒருவர் ஆனையிறவு தடை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ் தேவி ரயிலில் பொலிசாரும் - இராணுவத்தினரும் கூட்டாக சோதனை நடாத்திய பொழுதே வெளி நாட்டவர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டாராம். (மா)

# மட்டு. ரயில் நிலைய உணவு களஞ்சியத்தில் கொள்ளை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ரயில் நிலைய உணவுக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான அரிசி, மா. சீனி மூடைகள் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 20 பேர் கொண்ட கோஷ்டியினர் உணவுக்களஞ்சியத்தினுள் புகுந்து அங்கிருந்த ஐந்து காவலாளிகளையும் ஆயுத முனையில் அறையொன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டு, உணவுப் பொருட்களை ட்ரக்டரில் ஏற்றிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, (மா)

# "இந்திய முயற்சிகளுக்கு பிரிட்டன் ஆதரவு"

—அமிர்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண இந்தியா எடுத்து வரும் முயற்சிகளுக்கு பிரிட்டன் தனது முழு ஆதரவையும் வழங்கி வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

கடந்த பத்து நாட்கள் லண்டனில் தங்கியிருந்த பொழுது பிரிட்டன் காமன் வெல்த் மற்றும் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்ததாகவும் அப்போது அவர் பிரிட்டனின் இந்த ஆதரவு பற்றி இவ்வாறு உறுதியளித்ததாகவும் அவர் கூறினார். (ஜ)

## பூஸாவில் 13 தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூஸாவில் பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தீவிரவாத நடவடிக்கைகளில் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் விசேட பயிற்சிபெற்றவர்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதின்மூன்று பேரில் ஒருவரான சுப்பிரமணியம் சுமேஸ்வரன் என்பவரே இவர்கள் சார்பில் பேச்சாளராக கண்காணிப்புக்குழு முன் தோன்றினார்.

அரசியல் கைதிகளாக தாம் கணிக்கப்பட வேண்டும் தம்மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். நவம்பர் 10ந் திகதிக்கு முன்னர் இவை கவனிக்கப்படாதவிடத்து அன்றுமுதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை தாம் மேற்கொள்ளப்போவதாக இவர்கள் தெரிவித்தனர்.

அந்த அறிக்கையில் மேலும் 613 பேர் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் அநேகர் தமிழர்களாவர். ஆறுபேர் மட்டுமே பெண்களும் சில முஸ்லிம்களும் உள்ளனர். ஒரு வருடத்துக்கும் மேலாக 57 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பூஸாவில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை விபரம் வருமாறு: பொலனறுவ மாவட்டம் 216 பேர், மட்டக்களப்பு மாவட்டம் - 186 பேர் திருமலை மாவட்டம் - 114, கொழும்பு மாவட்டம் - 31 திக்கவெட்டிய - 10, முல்லைத்தீவு 7, [illegible] யாழ்ப்பாணம் 3, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மரண அறிவித்தல்

## செல்வி கதிர்காமநாதன் மணிமாலாதேவி

[அகாலமரணம்]

இராமநாதன் கல்லூரி பழையமாணவியும், கோக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவியும் ஆகிய கதிர்காமநாதன் மணிமாலாதேவி காலமானார். இவர், காலஞ்சென்ற கதிர்காமநாதன், திருமதி திலகமணி கதிர்காமநாதனின் மகளும். இராமனா, பிறேமனா, நிர்மலா (ஜேர்மனி சென்று, சுரேஸ். ஆகியோரின் அன்புச்சகோதரியும், அமைதாசன். ஜெகதீஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், சாலினி மோணிகா. வினிபிறீடா பிறேமா, சங்கரலிங்கம் தனுசன் ஆகியோரின் சித்தியும் ஆவார். ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (3-11-85) காலை 10-00 மணிக்கு உடுவில் அவரது இல்லத்திலிருந்து மாவிட்டபுரம் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர் 1577

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

காலஞ்சென்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சோமசுந்தரம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் - வவனியா), பிரபல வர்த்தகர்கள் ஆறுமுகம் நடராசா (ஆறுமுகம் பிறதேஸ்-பரந்தன்) மயில்வாகனம் (உதவி வைத்திய அதிகாரி - காரைநகர் அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் பாலாவோடை இல்லத்தில் 03-11-85 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 9-00 மணிக்கு நடைபெற்று திக்கை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

தகவல்:

மக்கள்

பாலாவோடை,
காரைநகர்

(1567)

# மரண அறிவித்தல்

## திரு. சுப்பிரமணியம் கதிரேசபிள்ளை

சுப்பிரமணியம் கதிரேசபிள்ளை அகாலமரணமானார். இவர், கொட்டடியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு திருமதி சுப்பிரமணியம் - வரலட்சுமி ஆகியோரின் ஏக புதல்வனும், தவராணியின் அன்புக் கணவரும், தனுலஷ்மி, தனுராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கமலநாயகி - பத்மநாதன் (கனடா) திருமதி பத்மநாயகி காசிநேசு (இலண்டன்) திருமதி செல்வநாயகி கோபாலபிள்ளை (அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், கொட்டடி சீனிவாசகம்-தியாகராஜா, திருமதி தியாகராஜா ஆகியோரின் அன்பு மருமகனுமான திரு. சுப்பிரமணியம் - கதிரேசபிள்ளை அவரது ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (3-11-85 இன்றுகாலை 9.00 மணிக்கு கொட்டடி ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இல 42, செல்வஸ்தான் இல்லத்திலிருந்து அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லூண்டாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(1575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org